பக்கங்கள்: பத்து

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 17 திங்கட்கிழமை [02-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:213

## 10 தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவல்

### முக்கியஸ்தர்களின் போக்குவரத்து குறைப்பு

கொழும்பு, ஓக. 2

கொழும்பு நகருக்குள் பத்து தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியுள்ளனர் என்றும்—

அவர்களின் இலக்கு ஜனாதிபதி, மூன்று அமைச்சர்கள், இரு தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள், முப்படைத் தளபதிகள், முன்னாள் இராணுவத் தளபதி ஆகியோர் என்றும்— புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்த தாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வம் உட்பட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இலக்காக உள்ள ஏனையோருக்கும் இது பற்றித் தெரியப்படுத்தியதாகவும்—

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு வழங்குமாறு தமிழ் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஓக. 2

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பட்டியலில் உள்ள தமக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன், யாழ். பிரதி மேயர் ரவிராஜ், ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே புலிகளின் தாக்குதல் பட்டியலில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அவர்கள் தமக்கு கூடுதலான பாதுகாப்பை வழங்குமாறு அரசிடம் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# ஜி.சீ.ஈ. பரீட்சை திட்டமிட்டபடி இன்று வன்னியிலும் ஆரம்பம்

## அனுருத்த தலைமையில் மாநாடு

கொழும்பு, ஓக. 2

கொழும்பில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதி அட்டைகள் இரவிரவாக விநியோகம்

வவுனியா, ஓகஸ்ட் 2

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலும் ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சை திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகவிருக்கின்றது.

நேற்று மாலை அங்கு எடுத்துச் செல்லப்பட்ட பரீட்சை அனுமதி அட்டைகள், நேர அட்டவணை ஆகியன வலய அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் வைத்து இரவிரவாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

மன்னார் பள்ளிமுனையில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் ஏழு படகுகளில் வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள், காகிதாதிகள் நேற்றுக் காலை 10-50 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டன.

பிற்பகல் ஒரு மணியளவில் இலுப்பைக் கடவை இறங்குதுறையை வந்தடைந்த படகுகளில் இருந்து அவை இறக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 2 சடலங்கள் கண்டுபிடிப்பு

மன்னார், ஓக. 2

மன்னார் பண்டிவிரிச்சானில் இளைஞர் ஒருவரினதும் யுவதி ஒருவரினதும் சடலங்கள் துப்பாக்கிச் சூடு மற்றும் கத்திவெட்டுக் காயங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன.

சாரமும் சேட்டும் அணிந்திருந்த நிலையில் இளைஞனின் சடலமும்—

சட்டை, பாவாடை அணிந்து தலை துண்டிக்கப்பட்ட நிலையில் யுவதியின் சடலமும்— மக்கள் நடமாட்டம் அற்ற பகுதி ஒன்றில் இருந்து ஓரளவு சிதைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை வன்னியில் நேற்று பூர்த்தி

வவுனியா, ஓக. 2

மாங்குளத்துக்கு மேற்கே, மூன்றுமுறிப்புக்கு வடக்கே துணுக்காய், வன்னி விளாங்குளம் ஆகியவற்றுக்கு தெற்கே உள்ள பகுதிகளில் ''போர்க் கோஷம்-4'' நடவடிக்கையின் 3 ஆவது கட்டமாக மட்டுப் படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்த இராணுவ நடவடிக்கை நேற்று முற்றுப் பெற்றது என்று தெரிவிக்கப் பட்டது.

இந்த நடவடிக்கையில் 45 சதுர கிலோமீற்றர் பிரதேசம் கைப்பற்றப்பட்டதாகவும்—

இந்த நடவடிக்கையில் படையினருக்கு யுத்த டாங்கிகளும் விமானங்களும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நடைபெறுவதற்கு போராட்டமே காரணம்

### கல்வி அதிகாரி தெரிவிப்பு

வவுனியா, ஓக. 2

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையை நடத்தக்கோரி இடம்பெற்ற போராட்டங்கள் காரணமாகவே அந்தப் பரீட்சையை நடத்த வாய்ப்புக் கிடைத்தது.

வன்னி கல்வி நிர்வாக இணைப்பாளர் பொன். சபாபதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பணத்துக்கு தட்டுப்பாடு

வவுனியா, ஓக. 2

இராணுவக் கட்டுப்பாடு அற்ற வன்னிப் பகுதியில் திரவப் பணத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக அங்குள்ள அரச ஊழியர்கள் தமது சம்பளக் காசோலைகளைப் பணமாக மாற்றமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகக் கிளிநொச்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாண்டியன் குளத்தில் நேற்று ஷெல் தாக்குதல் குடும்பஸ்தர் உயிரிழப்பு

வவுனியா, ஓக. 2

இராணுவக் கட்டுப்பாடற்ற பாண்டியன்குளம் பகுதி மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் அந்தஇடத்திலேயே உயிரிழந்தார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாண்டியன்குளம், செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி சிவகோபால் (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவார்.

பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் மேற்படி குடும்பஸ்தர் தனது வயலில் வேலை செய்துகொண்டிருந்த போதே ஷெல் வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்தார் என அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (இ-7)

## வன்னி மக்களுக்காக பேராலயத்தில் வழிபாடு

யாழ்ப்பாணம், ஓக. 2

போக்குவரத்துத் தடை காரணமாக பட்டினியாலும் நோயின் தாக்கத்தாலும் இறந்து கொண்டிருக்கும் வன்னி மக்களுக்கு உடனடியாக உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப வேண்டும் என்று கோரி நேற்று யாழ். மரியன்னை பேராலயத்தில் விசேட வழிபாடுகள் இடம் பெற்றன.

நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெற்ற இந்த வழிபாட்டு நிகழ்வில் வன்னி மக்களின் துன்பங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வ மத பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 2

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு தரை வழிப்பாதை ஒன்றைத் திறக்கவும் அங்கு ஜி. சீ. ஈ. உயர்தரப்பரீட்சை சுமூகமாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படகு மூலம் நோயாளர்களை அனுப்பும் பணி நேற்று ஆரம்பம்

### இருவர் பள்ளிமுனை வந்து சேர்ந்தனர்

வவுனியா, ஓக. 2

வன்னியில் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்கு அழைத்துச் செல்லும் பணி சுமார் ஒருமாத காலத்தின் பின்னர் நேற்று மீண்டும் ஆரம்பமானது.

கடல் மார்க்கமாக இலுப்பைக்கடவை இறங்குதுறையில் இருந்து பள்ளிமுனை இறங்குதுறை வரை படகுகள் மூலம் அவசர நோயாளர்கள் அழைத்து வரப்படுவர்.

அங்கிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் வவுனியா, அனுராதபுரம் ஆஸ்பத்திரிகளுக்கு அவர்கள் கொண்டு செல்லப் படுவர்.

முதல் தடவையாக இலுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கோப்பாய்ப் பிரதேசத்தில் மட்டும் மிதிவெடியால் 41 பேர் அங்கவீனம்

வலி. கிழக்கு, ஒக. 2

வலிகாமத்தில் மக்கள் மீளக்குடியேறிய பின்னர் இதுவரை கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் மிதிவெடிகளால் 41 பேர் அங்கவீனமுற்றுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர்.

மிதிவெடிப் பாதிப்புத் தொடர்பாக எடுக்கப்பட்ட புள்ளி விவரத் தரவுகள் மூலம் இது தெரியவந்துள்ளது.

நீர்வேலி வடக்கு, கோப்பாய் வடக்கு ஆகிய பகுதிகளிலேயே கூடுதலான மிதிவெடி வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இரண்டு குடும்பங்களில் தலா இருவர் மிதிவெடியினால் அங்கவீனமடைந்துள்ளனர்.

கால், கை, கண்பார்வை இழந்தோரில் பெரும்பாலானோர் மாணவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மிதிவெடிகளை அகற்றும் பணியின்போது இப் பிரதேசத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று இப்பகுதிப் பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன.

(ஐ-180)

## 'மாஹோ' கப்பலில் விதை நெல் வரும்

யாழ்ப்பாணம், ஒக. 2

கமநல சேவைகள் திணைக்களம் மூலம் பெரும் போக நெற் செய்கைக்கான ஆயிரத்து 500 புசல் விதை நெல் 'மாஹோ' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளது.

முற்பணம் செலுத்தி கமநல சேவைகள் நிலைங்களில் பதிவு செய்த விவசாயிகளுக்கான விதை நெல்லே கப்பல் மூலம் எடுத்து வரப்படுவதாக கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ், சுந்தரேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்புத்துறைமுகத்தில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்டுள்ள இந்த விதை நெல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் அவை கமநல சேவைகள் நிலையங்கள் மூலம் பதிவு செய்த விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பதிவு செய்யப்பட்ட மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட விதை நெல் இனங்களே இம்முற எடுத்துவரப்பட உள்ளன. [ஐ-6-9]

## சேமிப்புச் சான்றிதழ் வழங்கல்

தென்மராட்சி, ஒக. 2

இலங்கை வங்கியின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி அதிக வட்டி வழங்கும் சேமிப்புச் சான்றிதழ்கள் வாடிக்கையாளர்களுக்கு இன்று முதல் வழங்கப்படவுள்ளன.

சாதாரண நிலையான வைப்புத் தொகைக்கு வங்கியினால் வழங்கப்படும் வட்டித் தொகையை விட சேமிப்புச் சான்றிதழுக்கு தசம் ஐந்து சதவீத வட்டி அதிகரித்து வழங்கப்படும்.

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் இன்று காலை 9 00 மணிக்கு சேமிப்புச் சான்றிதழ் வழங்கும் வைபவம் வங்கி முகாமையாளர் ஏ ரி ஏ. தேவராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்படும்

(ஐ-117)

ஜி சீ. ஈ. பரீட்சை மோசடியைத் தடுக்க

## கல்முனைப் பொலீஸார் சிவில் உடையில் பணி

மட்டக்களப்பு, ஒக. 2

கல்முனை கல்விப் பிராந்தியத்தில் ஜி, சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் மோசடிகளைத் தடுப்பதற்காக சிவில் உடையில் பொலீஸார் கண்காணிப்புகளில் ஈடுபடவிருக்கின்றார்கள்.

கடந்த வருடம் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே அக்கரைப்பற்று, நிந்தவூர் பகுதிகளில் வெளியானமை கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்ததே

இதனையடுத்தே பரீட்சை நிலைய சுற்றாடல்களில் சிவில் உடையில் பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-21)


## வீடியோ நிமல்

802/5, பலாலி வீதி, திருநெல்வேலி.

எமது ஸ்தாபனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் (Jialing JD-90) பத்திரங்கள் வந்துள்ளன. உரியவர்கள் மூன்று நாள்களுக்குள் வந்து பெற்றுக் கொள்ளவும்

தவறின் நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர்.

### இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| (1) | C – 98002889<br>E – 98026202 | (2) | C – 98002936<br>E – 98026117 |
| (3) | C – 98002945<br>E – 98023924 | (4) | C – 98002883<br>E 98026225 |
| (5) | C – 98002900<br>E – 98026219 | (6) | C – 98002865<br>E – 98026249 |
| (7) | C – 98002891<br>E – 98026232 | (8) | C – 98002882<br>E – 98026151 |
| (9) | C – 98002907<br>E 980 '62 17 | (10) | C – 98002895<br>E – 98026220 |

(67786)

## கணக்கீடு A/L 2000

பங்குடைமை by S.D J Sutharshan

ஆரம்பம்: 03-08-99 செவ்வாய் 2-30 (ப.நே)

பொஸ்கோ

25, நக்கா வீதி, யாழ்.

(67884)

## ராஜா

யாழ்ப்பாணம்

பிரபுதேவா - கஜோல் மற்றும் பலர் நடித்த

மின்சாரக் கனவு

10-30, 2-30

(சி/8355)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று

மணிவண்ணன், ரம்பா நடித்த

காதலர்தினம்

( புதிய வெளியீடு )

நேரம்; 10-30, 2-30

(67708)

## நாகம்ஸ்

சுன்னாகம்

ரஜனி - குஷ்பு –ஜனகராஜ் நடித்த

பாண்டியன்

[illegible]

( புதிய நேரம் )

[67862]


## கண்ணீர் அஞ்சலி

எமது தேவஸ்தான பிரதம அர்ச்சகர்

பிரம்மஸ்ரீ க. கேசவ சர்மா

அவர்களின் அன்புத் தந்தையார்

பிரம்மஸ்ரீ

### ஞானிஐயா கணேசஐயர்

(துன்னாலை வடக்கு)

அவர்கள் இறைபதி எய்தியதையிட்டு பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தாருக்கு எமது இதயபூர்வமான ஆறுதலையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிக்கின்றோம்

ஞானசெல்வ விநாயகர் தேவஸ்தானம்

புதுவீதி, கொய்யாத்தோட்டம்.

(6788[illegible])

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

செல்வி இராசாத்தி கனகரத்தினம்

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கனகரத்தினம் அன்னம்மா

அவர்கள் 31 – 07 - 1999 இல் காலமாகியதை அறிந்து ஆறாத்துயர் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/8391)

## மரண அறிவித்தல்கள்

டாக்டர்

### சின்னத்துரை பாலசுப்பிரமணியம்

( Dr. S BALA )

[Maxilo Facial Surgeon (Retired) Withington Group of Hospitals, U K. ]

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் U K, England, Cheshire, Wilmslow Hunters Mews No- 4 இல் வசித்தவருமான டாக்டர் சின்னத்துரை பாலசுப்பிரமணியம் (Retired Maxilo Facial Surgeon) அவர்கள் 28—07—99 அன்று காலமானார்.

இவர் யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான சின்னத்துரை [J P, Malayan Pensioner]. இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், தனலக்ஷ்மி அவர்களின் அன்புக் கணவரும், சசி [லண்டன்], டாக்டர் குமா [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் நந்தபாலன் [Senior Registrar ENT Unit, Liverpool Hospital], மனோஜ் தணிகாசலம் [Electronic Engineer, U K] ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இராஜலட்சுமி. மகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேந்திரன் [Mechanical Cum-Computer Engineer U. K], கமலேஸ்வரி [பாப்பா] ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற T கணாரெத்தினம் [Retired Principal] S நவரத்தினம் [Retired Deputy Auditor General], V அரியநாயகம் [Retired Principal], சறோஜினி [லண்டன்] ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவிதா, கிரிஷ்சான், செறீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் Cheshire, Wilmslow Hunters Mews No 4 இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் 04— 08— 99 புதன்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

A. M. திருவாதவூரன் [சட்டத்தரணி]

198, கஸ்தூரியார் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

[67871]

தொலைபேசி இல: — 0625 — 532146

### சின்னத்துரை நடராசா

( Ret. Dispensar )

இமையாணன் வடக்கு உடுப்பிட்டி திருவாதணியைச் சேர்ந்த சின்னத்துரை நடராசா 31-07-99 அன்று அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், ந. யோகதாசன் (கனடா) Dr ந. குகதாசன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), ந. கண்ணதாசன், திருமதி சாந்தவதனி, செல்வச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி பானுமதி யோகதாசன், கு. செல்வச்சந்திரன் (சோதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசுப்பிரமணியம், திருமதி சாவித்திரி பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31 – 07 - 99 பிற்பகல் என்னம்குளம் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

Dr. ந. குகதாசன்,
ந. கண்ணதாசன்.

''திருவாதணி''
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

[67874]

### ஜெயரெட்ணம் ஜெயறொகான்

கச்சேரி கிழக்கு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரெட்ணம் ஜெயறொகான் 28-07-99 அன்று ஜேர்மனியில் அகால மரணமாகி விட்டார்.

இவர் ஜெயரெட்ணம் (இளைப்பாறிய நேவி வைலஸ் ஒவ்வீசர்), றோஸ்மலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மகனும், ஜெயறொசானி (ஜேர்மனி), ஜெயறொசான் (ஜேர்மனி), ஜெபவேர்ஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சொலமன், றஞ்சன் (ஜேர்மனி), சுபாசினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை கிறிஸ்தோபர் - நல்லம்மா, காலஞ்சென்ற திரு. திருமதி சாமுவேல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.

திருமதி கிறிஸ்தோபர் (பேர்த்தி)

17/2A, புனித அன்னாள் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[67882]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் மீண்டும் காட்டுத்தீ!

ஜகார்த்தா, ஒக. 2

**இந்தோனேசியாவின் போணியோ மற்றும் சுமத்திரா காடுகளில் மீண்டும் காட்டுத் தீ பரவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.**

இந்தப் பகுதிகளில் சில இடங்களில் மலையேறிகள் சிலர் மூட்டிய தீ காடுகளில் பற்றி எரிவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் தென்கிழக்கு ஆசியா முழுவதையும் பாதித்த பெரும் காட்டுத் தீ அனர்த்தம் போன்ற நிலைமையை மீண்டும் உருவாக்கக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய தீயினால் ஏற்பட்ட புகைமண்டலம் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுத்தும் அளவில் பரவியுள்ளதாகவும் —

மலேசியாவின் பல இடங்களிலும் பெரிய அளவிலான புகைமண்டலம் பாவி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் —

அதிகாரிகள் தெரிவித்தனர்.

செயற்கைக்கோள் மூலம் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி எண்ணிக்கை தெரியாத பல இடங்களில் காடுகள் பற்றி எரிந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

போர்ணியோவில் பொது மக்கள் முகமூடிகளை அணியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் —

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை வெளியேற்றும் நோக்கில்வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் சில இந்த சுற்றுச் சூழல் அனர்த்தம் தொடர்பான செய்திகளை வேண்டுமென்றே வெளியிட்டு வருவதாக மலேசிய சுற்றுச் சூழல் அமைச்சு குற்றஞ் சாட்டி உள்ளது. (ஐ)

## அமெரிக்காவில் வெப்பத்துக்கு 11 பேர் பலி

நியுயோர்க், ஒக். 2

அமெரிக்காவில் அதிகரித்து வரும் வெப்பநிலையின் காரணமாக இதுவரை 11 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது.

பலியானவர்களில் அநேகமானோர் வயதானவர்களும் நோயாளிகளும் என அறிவிக்கப்படுகிறது. இவர்கள் பலர் குளிரூட்டப்படாத வீடுகளில் வசிப்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெப்பத்தின் கொடுமையில் இருந்து தம்மைக் காப்பது தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றன. உயிரிழப்புக்களை குறைக்கும் நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. (ஐ-ரி)

## பவுலா ஜோன்ஸ் பாலியல் வழக்கு:

# நஷ்டஈடாக 90 ஆயிரம் டொலர் செலுத்த கிளின்ரனுக்கு உத்தரவு

லிட்டில் றொக், ஒக. 2

பவுலா ஜோன்ஸின் பாலியல் துன்புறுத்தல் வழக்கு விசாரணையின்போது தனக்கும் மொனிக்கா லுவின்ஸ்கிக்கும் பாலியல் தொடர்பு இருக்கவில்லை என்று பொய் கூறிய அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் அதற்காக 90 ஆயிரம் அமெரிக்க டொலர்களைத் தண்டப் பணமாக வழங்கவேண்டும் என சமஷ்டி நீதிமன்ற நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொய்யான, தவறான, பிழையான தகவல்களை அளித்த நீதியை அவமதித்த கிளின்ரன் மேற்குறித்த தொகைக்கு மேலதிகமாக வழக்கறிஞர்களுக்கு ஏற்பட்ட செலவையும் வழங்கவேண்டும் என்றும் அமெரிக்க மாவட்ட நீதிவான் சுசன் வெபர்ரைட் கட்டளை பிறப்பித்துள்ளார்,

இந்த உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்வதைவிட அத் தொகையை வழங்குவதையே கிளின்ரன் விரும்புவதாகக் கிளின்ரனின் வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

60 நாள்களுக்குள் அத் தொகையை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ள வெபர்ரைட் பவுலா ஜோன்ஸை பிரதிநிதித்துவம் செய்த சட்டக் கம்பனிகளுக்கு அத் தொகை செல்லவேண்டும் என்று கூறியுள்ளார்.

1991 ஆம் ஆண்டு மே மாதம் கிளின்ரன் ஆர்கன்ஸாஸில் ஆளுநராக இருந்தபோது அங்கு அரசபணியாளராகக் கடமையாற்றிய தன்னை தனியாக அழைத்து மோசமான முறையில் பாலியல் உறவுகொள்ளுமாறு கிளின்ரன் நிர்ப்பந்தித்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி 8 லட்சத்து 50 ஆயிரம் டொலர்களை வழங்கும்படி பவுலா வழக்குத் தொடுத்திருந்தார்.

பவுலாவின்வழக்கில் சாட்சியமளிக்கும் போது தனக்கும் லுவின்ஸ்கிக்கும் இடையில் தொடர்பு இல்லை என கிளின்ரன்தெரிவித்திருந்தார். ஆனால் பின்பு லுவின்ஸ்கியுடன் தனக்கு தொடர்பு உண்டு என்பதை அவர் ஒப்புக் கொண்டமை தெரிந்ததே.

[ஐ-க]

# நிலாவில் நீரைக் கண்டறிய விண்கலம் அங்கு இறங்கியது!

கேப் கனரவெல் ஒக. 2

சந்திரனில் தண்ணீர் உள்ளதா என்பதைக் கண்டறியும் ஒரு முயற்சியாக விண்கலம் ஒன்று நேற்று முன்தினம் அங்கு தரையிறக்கப்பட்டிருக்கிறது.

சந்திரனில் தண்ணீர் உள்ளது என நம்பும் அமெரிக்க விஞ்ஞானிகள் தமது கோட்பாட்டை உறுதிப்படுத்த இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நிலாவின் பள்ளமான பகுதி ஒன்றில் இந்த விண்கலம் வீழ்த்தப்பட்டிருப்பதாகவும் —

அது வீழ்ந்த இடத்தில் ஏற்படும் மாற்றங்களை 'ஹபிள்' தொலைநோக்கியின் உதவியுடன் விஞ்ஞானிகள் கண்காணித்து வருவதாகவும் —

அறிவிக்கப்படுகிறது.

நிலாத் தரையின் இத்தகைய பள்ளங்களிலேயே பனிக்கட்டி உறைந்துள்ளதாக நம்பப்படுகிறது. இன்னும் சில நாள்களில் அங்கு தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்படலாம் என 'நாஸா' விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இந்த ஆய்வு வெற்றியளித்து தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டால் அது மனிதர்கள் சந்திரனில் குடியேறுவதற்கான முதற்படியாக அமையும். (ஐ)

# கலாநிதி நீலன் படுகொலைச் சம்பவம் சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும்

## அமெரிக்க அதிபர் கிளின்ரன் செய்தி

வாஷிங்ரன்,(ராய்ட்டர்) ஒக1

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன்திருச்செல்வம் படுகொலைசெய்யப்பட்டதையடுத்துஇலங்கையில் நல்லிணக்கத்துக்கான சக்தி மிக்க குரல் ஒன்று மௌனமாகப் பட்டுவிட்டது. இந்த அனர்த்தம் இலங்கையில் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கும் என நம்புகிறேன்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இவ்வாறு தெரிவித்திருந்தார்,

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து செய்தியொன்றை விடுத்திருக்கும் கிளின்ரன்,அவர் படுகொலை செய்யப்பட்டதை அறிந்து தானும் தனது மனைவி ஹிலாரி கிளின்ரனும் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

பயங்கரவாதிகளின் கையில் நீலன் திருச்செல்வம் மரணத்தைத் தழுவியதைக் கேட்டு நானும் எனது மனைவியும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்திருக்கின்றோம். திருச்செல்வத்தை எனது மனைவி 1995 இல் ஒரு தடவை சந்தித்திருந்தார். இலங்கை இன நெருக்கடிக்கு சமாதான ரீதியானதும் நீதியானதுமான தீர்வொன்றைக் காண்பதற்காக திருச்செல்வம் தன்னை அர்ப்பணித்திருந்தார். அவரை ஒரு தடவை சந்தித்திருந்த மனைவி மனம் கலங்கிப்போயிருக்கிறார். அவரது மனைவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம் என்று கிளின்ரன் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# விஞ்ஞானியின் அஸ்தி சந்திரனில் கரைப்பு!

வாஷிங்ரன், ஒக. 2

சந்திரத் தரையில் தண்ணீர் உள்ளதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக அங்கு தரையிறக்கப்பட்ட சிறிய விண்கலத்தில் மறைந்த விஞ்ஞானி ஒருவரின் அஸ்தியும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

வேற்றுக் கிரகம் ஒன்றில் மனித அஸ்தி கரைக்கப்படுவது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

சூமேக்கர் – லெவி என்ற வால் வெள்ளியைக் கண்டு பிடித்த பிரபல விஞ்ஞானியான சூமேக்கரின் அஸ்தியே சந்திரனுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

இவர் அவுஸ்திரேலியாவில் கார் விபத்து ஒன்றில் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்த் தீவிரவாதிகள் குழு சென்னைக்குள் ஊடுருவலாம்

சென்னை, ஒக. 2

இலங்கையிலிருந்து தமிழ்த் தீவிரவாதக் குழுவொன்று இந்தியாவுக்குள் ஊடுருவியிருப்பதாக இந்திய இராணுவ உளவுப்பிரிவு, ஐ. பிரா ஆகிய உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இத்தீவிரவாதக் குழு தற்போது சென்னையில் தங்கியிருப்பதாகவும் இவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கும் இந்தத் தீவிரவாதக் குழுவுக்கும் தொடர்புகள் எதுவும் உள்ளனவா என்பது பற்றி பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ 8]

## கொலம்பியாவில் கார்க்குண்டு வெடிப்பு

கொலம்பியாவில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். இராணுவத்தினர் உட்பட 30 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

கொலம்பிய இராணுவத்தின் ஆள் கடத்தல் தடுப்புப் பிரிவு கட்டடத்திற்கு அண்மையிலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

காரினுள் 90 கிலோகிராம் வெடி மருந்து பொருத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ஐ-க)

## பஸ் விபத்தில் 10 பேர் பலி

பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்று முன்தினம் 30 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று எதிர்பாராதவிதமாக கால்வாய்யினுள் வீழ்ந்ததில் 10 பயணிகள் உயிரிழந்தனர் 17பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

8 மீற்றர் ஆழமான இந்தக் கால்வாய்க்குள் மீட்புப் பணியாளர்கள் உடனடியாக மீட்பு நடவடிக்கையினை மேற்கொண்டதில் மூவர் மீட்கப்பட்டனர்.

## அகராதிக்கு ஆங்கிலச் சொற்கள்

லண்டன், ஒக. 2

பிரபல ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி தொகுப்பாளர்கள் தமது அடுத்த வெளியீட்டில் சேர்த்துக்கொள்வதற்காக புதிய ஆங்கிலச் சொற்களை அனுப்பி வைக்குமாறு தமது வாசகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [ஐ]

## பங்குச் சந்தையில் நஷ்டம்

# 12 பேரைக் கொன்ற பின் அமெரிக்கர் தற்கொலை!

பங்குச்சந்தையில் ஏற்பட்ட நஷ்டத்தை அடுத்து தனது குடும்பத்தவரையும் வேறு ஒன்பது பேர்களையும் கொலை செய்துவிட்டு தற்கொலை செய்துள்ளார் அமெரிக்கர் ஒருவர்.

இவர் பங்குச் சந்தையில் 105 அமெரிக்க டொலர்களை இழந்திருந்தார்.

மார்க் பாட்டன் என்றழைக்கப்படும் இந்த அமெரிக்கர் முதலில் தனது மனைவியையும் இரு குழந்தைகளையும் கொலை செய்தார். அதன் பின் தமது பங்குகளை முதலீடு செய்த அலுவலகத்துக்குச் சென்று அலுவலகப் பணியாளர்கள் ஐந்து பேரைச் சுட்டுக் கொன்றதுடன் அருகில் வேலை செய்து கொண்டிருந்த மேலும் நான்கு பேரையும் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இளைய தம்பி பவானி, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்பவருடையவிசேடஅடையாள அட்டையும்475401930V இல. கொண்ட தேசிய அடையாள அட்டையும் தவறி விட்டன. கண்டு எடுத்தவர்கள் துளசி பான்சி, 45, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [67869]

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ தொடர் இலக்க Fiat – 124 Model கார் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்க்கப்படும். எந்த நேரமும் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு: இல. 113, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (67842)

உத்தியோகத்தர்களுக்கேற்ற கார், ''வெஸ்பா'' ஸ்கூட்டர் மற்றும் ஆட்டுக்கடா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 680, பருத்தித்துறை வீதி, [சந்தியாகடை முன்பாக] நல்லூர். [67876]

நல்ல நிலையிலுள்ள HONDA– 50 Super Cup விற்பனைக்குண்டு. தொடர்பு: பழைய இல. 319, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி அருகில்). [67865]

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்கு அருகில் சகல வசதிகள் கொண்ட பெரிய வீடு (ரியூட்டரிக்கு அல்லது காரியாலய பாவனைக்கு உகந்தது) வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: A. மரியநாயகம், 532, நாவலர் வீதி (நாலாம் சந்தி அருகில்), யாழ்ப்பாணம். [67875]

### வீடு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 922, மே/பா. உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சுண்டுக்குளிப் பகுதி விரும்பத்தக்கது) [67873]

### மணமக்கள் தேவை

எக்கவுண்டன், ஆசிரியர், கிளார்க், எஞ்ஜினியர், வர்த்தகர்கள், வெளிநாட்டு மணமக்கள் ஆகிய சகல தரத்திலும் மணமக்கள் எம்மிடம் உண்டு. பதிவுக் கட்டணம் இல்லை. உடன் தொடர்புகளுக்கு: வராகி திருமண சேவை. இல.132, பருத்தித்துறை வீதி, 3 ஆம் கட்டை. [67866]

### படிவம்

பட்டதாரிகள் பயிற்சி வேலைத்திட்ட விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. விண்ணப்ப முடிவு திகதி: 10-08-99. பிரதி ஒன்றின் விலை ரூபா 5.00. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C/8383]

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 37 வயதுடைய கனடாவில் பிரஜா உரிமை பெற்று நிரந்தர தொழில் புரியும் மகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை. சீதனம் பிரச்சினை இல்லை. அண்மையில் எடுத்த புகைப்படம், சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 919, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67820)

### அதிர்ஷ்டமான வாழ்வு

நீங்கள் அதிர்ஷ்டமான வாழ்வு வாழ்வதற்கு உடன் நாடவேண்டிய ஜோதிட நிலையம், ஆபூர்வ ஜோதிட நிலையம், ஆலடிச்சந்தி, UP 304, பலாலி வீதி, யாழ். நகர். ஆரம்பம்: 01-08-99 நேற்றுமுதல். [67828]

# இடம்பெயர்ந்து நல்லூரில் வசிக்கும் 403 குடும்பங்களுக்கு 5,000 ரூபா

## இன்று முதல் விநியோகம்

வலி. கிழக்கு, ஒக. 2

இடம்பெயர்ந்து தற்போது நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 403 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இடம் பெயர்ந்து இப்பிரிவில் வசிக்கும் குடும்பங்களுக்கு இதுவரை இக்கொடுப்பனவு வழங்கப்படாமல் இருந்தது.

முதல் முறையாகவே 403 குடும்பங்களுக்கு இப்பணத்தினை வழங்க நிதி கிடைத்துள்ளதாகவும் —

இன்று திங்கட்கிழமை தொடக்கம் இக்கொடுப்பனவை சம்பந்தப்பட்டோர் தமது வங்கிக் கணக்குகளில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்றும் —

பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180-86)

# கோப்பாய் றோ.க. பாடசாலை புதிய 'கட்டடத்திற்கு நிதி

வலி.கிழக்கு, ஒக. 2

இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்த கோப்பாய் மத்தி றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக் கட்டடத்தினை புதிதாக இருமாடிகளாக அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் 5 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பாடசாலையின் ஒரு பகுதிக் கட்டடம் முற்றாகச் சேதமுற்றுள்ளது.

இக்கட்டடத்திற்கான ஆரம்பவேலைகள் வெகுவிரைவில்ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தெரிவித்தார்– (ஐ-180)

# உள்ளூராட்சி சபைகளின் நிதி விவரம் சேகரிப்பு

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கடந்த 6வருடகாலசபைநிதி தொடர்பான விவரங்களை பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் ஊடாக ஜனாதிபதி செயலகம் கோரி உள்ளது.

நிதியின் அளவு, பயன்பாடு செயற்பாட்டு நிலைமை தொடர்பான விவரங்களைத் திரட்டி யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. [ஐ-185]

# 12 குளங்கள் புனரமைக்கப்படும்

## வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பம்

உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் குடாநாட்டில் 12 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட உள்ளன.

சாவகச்சேரியில் 7 குளங்களும் —

கரவெட்டியில் 4 குளங்களும்—

பருத்தித்துறையில் ஒரு குளமும்,

இந்த வருடம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

புனரமைப்புப் பணிகளை அடுத்த மாதம் 15 ஆம் திகதியளவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

குளங்களைப் புனரமைக்கும் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான சம்பளமாக வழங்கப்படுவதற்குரிய உலர் உணவுப் பொருள்கள் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்காக கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்பட்டு வருகின்றன.

அரிசி 256.7 மெற்றிக் தொன், பருப்பு 20.5 மெற்றிக் தொன், சீனி 10.2 மெற்றிக் தொன் ரின் மீன் 5.1 மெற்றிக் தொன் என்பன லங்கா முடித்த கப்பல் மூலம் எடுத்து வரப்படும்.

இந்த உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-9)

# வலி. மேற்குப் பிரதேசத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு

வலி.மேற்கு, ஒக.2

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்வதற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சுமார் 160 காலம்கடந்த பிறப்பு,இறப்பு பதிவுகளை பதிவுசெய்வதற்கு பிரதேசசெயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்கள் மூலம் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பிரதேச செயலர் யாழ். மாவட்ட பிறப்பு, இறப்பு மேலதிக பதிவாளர் மற்றும் உத்தியோகத்தர்களை பிரதேச செயலகத்துக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டு காலம் கடந்த சுமார் 160 பிறப்பு, இறப்பு பதிவுகளை பதிவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளார். (ஐ-175)

# அச்சுவேலியில் ஞாயிறு தினங்களில் கடைகள் மூடப்படும்

அச்சுவேலி வர்த்தக சங்க எல்லைக் குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களு ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட்டிருக்க வேண்டும் என அச்சுவேலி வர்த்தக சங்கம் சகல வர்த்தகர்களுக்கும் அறிவித்துள்ளது.

இப் பகுதியில் முன்னர் ஞாயிறு தினங்களில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டதால் தமக்குப் பாதிப்பு ஏற்படுவதாக ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ-180)

## நீலன் கொலையின் எதிரொலி

# கொழும்பில் இதுவரை 50 தமிழர்கள் கைது

கொழும்பு, ஒக. 2

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் கொலை தொடர்பாக இதுவரை ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைதுசெயப்பட்டுள்ளனர்.

பொலீஸாரும் படையினரும் நகரின் பல பகுதிகளிலும் தேடுதல்கள் நடத்தியும், வீதிச் சோதனைகள் நடத்தியும் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

நகருக்குள் மேலும் பல தற்கொலைப்படையினர் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்துள்ள தகவல்களையடுத்தே இத் தேடுதல்கள்நடைபெற்று வருவதாகப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

புலிகளின் தாக்குதல் பட்டியலில் பல அமைச்சர்கள், தமிழ் அரசியல்வாதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளதாகப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் எச். எம். ஜி. பி. கொட்டகதெனிய தெரிவித்துள்ளார். (ஐ-8)

## நெடுந்தீவு தண்ணீர்ப் பிரச்சினை:

# மழைநீரைத் தேக்குமாறு நிபுணர்கள் யோசனை

நெடுந்தீவில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு மழைநீரைச் சேகரித்தல், குழாய்க்கிணறுகளை அமைப்பது அவசியம் என ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் தெரிவித்துள்ளன.

நெடுந்தீவு மேற்கு,கிழக்குப் பகுதிகளில் குடிதண்ணீர் விநியோக விஸ்தரிப்பு தொடர்பாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரும், பிரதேச சபைத் தலைவரும், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளுடனும் பேசிய போது இவ்வாறு கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

மேற்குப்பகுதியில் குடிதண்ணீர் விநியோகச் சேவைக்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒரு லட்சம் ரூபா வழங்கியுள்ளார். (ஐ-111)


## 45-ம் நாள் நினைவஞ்சலியும் மோட்சதீப, சபிண்டிகரண வைபவமும்



தாயின் மடியில் 20 – 02 – 1967

இறைவன் அடியில் 19 – 06 – 1999

அமரர் சுப்பிரமணியம் சுகேந்திரன் (தேவன்)

பாரினிலே பதை பதைக்க மனைவி மக்கள்
ஊரினையே விட்டு உம்பர் உலகடைந்தாய்
நீரினிலே சாந்தி செய்தோம் நிமலன் தாளில்
சீரிய நல் வாழ்வுபெற வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி !

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள், உற்றார், உறவினர்.

குடமியன், வரணி.



இன்னும் 5 நாள்களில்

## ஆண்டு5 -புலமைப்பரிசில் -1999

★ சனி வெளியாகிய 3 வினாத்தாள்கள்
★ நேற்றைய வினாத்தாள்
★ இன்றைய வினாத்தாள்

விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

BOND யாழ். நகர். [67880]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபையை
# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி [ஈ. பி. டி. பி]
# கையேற்ற பின்பு நடைபெற்ற வேலைகள் விவரம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம், மக்களால் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சபைகள் மூலம் மக்களின் தேவைகளை அறிந்து சேவைகளைச் செய்துவரும் நாம், எமது செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலின் மூலமும் மக்களின் ஒத்துழைப்பின் மூலமும், யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வி. கே. ஜெகனின் முயற்சியாலும் கோணாது சேவை செய்துவரும் இவ்வேளையில் பல பிரதேச உறுப்பினர்களை துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரை கொடுத்தும், தொடர்ந்துவரும் அச்சுறுத்தலின் மத்தியிலும் எமது மக்களின் பணிகளில் இருந்து விலகி ஓடிப்போவதும் இல்லை; ஓடப்போவதும் இல்லை என்பதை மக்களாகிய உங்களுக்குத் தெரிவிப்பதுடன் எமது சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் எவை என்பதை பத்திரிகை வாயிலாகச் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்

திரு. ந. திரிலோகநாதன்
(வட்டுக்கோட்டைத்தொகுதி ஈ. பி. டி. பி. அமைப்பாளரும் வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தலைவரும்).

வே. மகேந்திரன்
(வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி.யின் உதவி அமைப்பாளரும் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் உபதலைவரும்)

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும்,
ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான

## கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா

அவர்களின் முயற்சியால்
மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து பெறப்பட்ட

## விசேட நிதி ரூபா 30 லட்சம் - 1998

### விசேட நிதி 1998 இல் முடிக்கப்பட்ட வேலைகள் விவரம்

| | | |
|---|---|---|
| 01. | சத்தியக்காட்டு மரக்கறிச் சந்தை மண்டபம் அமைத்தல். | — 200,000/- |
| 02. | சங்கரத்தை சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 100,000/- |
| 03. | முதலி கோயிலடி அம்பாள் சனசமூக நிலைய கட்டடம் அமைத்தல் | — 100,000/- |
| 04. | அராலி வடக்கு கலைவாணி சனசமூக நிலைய கட்டட திருத்தம் | — 75,000/- |
| 05 | பிளவத்தை சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 50,000/- |
| 06. | காந்திஜி சனசமூக நிலையத்துக்கு ஜெனரேற்றர் வழங்கல, வட்டுக்கோட்டை | — 100,000/- |
| 07. | மரமுந்திரிகைக் கன்று வழங்கல் பிரதேச சபை எல்லைக்குள் | — 100,000/- |

மேற் கூறிய வேலைகள் யாவும் செய்து முடிக்கப்பட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரு. ந. திரிலோகநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டும், வழங்கப்பட்டும் உள்ளன.

| | | |
|---|---|---|
| 08. | காரியாலயத்துக்கு தளபாடங்களும், பொருள்களும் கொள்வனவு | — 500,000/- |
| 09. | சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 75,000/- |
| 10. | சித்தங்கேணி நாமகள் சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 75,000/- |
| 11. | மூளாய் மனிதவள அபிவிருத்தி சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 75,000/- |
| 12. | சுழிபுரம் ஸ்ரீ கணேசா சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 75,000/- |

### 1998 விசேட நிதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேலைகள்.

| | | |
|---|---|---|
| 13. | சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையக் கட்டடம் அமைத்தல் | — 75,000/- |
| 14. | அராலி கிழக்கு அம்பாள் சனசமூக நிலையக் கட்டடம் திருத்தம் | — 25,000/- |
| 15. | வட்டுக்கோட்டை பொதுச் சந்தை கட்டட திருத்தம் | — 14,000/- |
| 16. | வட்டுக்கோட்டை பொதுச் சந்தை கூரை திருத்தம் | 29,000/- |
| 17. | வட்டுக்கோட்டை பொதுச் சந்தை மலகூடம் அமைத்தல் | — 82,000/- |
| 18. | சுழிபுரம் வீரபத்திரர் சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 25'00) |
| 19. | சுழிபுரம் ஸ்ரீராம் சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 75,000/- |
| 20. | சங்கானை ஸ்ரீபாரதி சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 100,000/- |
| 21. | சங்கானை சரஸ்வதி சனசமூக நிலையக் கட்டட திருத்தம் | — 50,000/- |
| 22. | பனிப்புலம் சுடலை மடம் அமைத்தல் | — 80,000/- |
| 23. | சுழிபுரம் சத்தியகாடு சந்தை மண்டபம் அமைத்தல் | — 220 000/- |
| 24. | தென்னை நடுகை | — 100,000/- |
| 25. | புத்தகம் கொள்வனவு | — 210,000/- |
| 26. | வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலையம் அமைத்தல் | — 300,000/- |
| 27. | சுழிபுரம் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத் தளபாடக் கொள்வனவு | — 15,000/- |
| 28. | சங்கானை மாவடி சனசமூக நிலையத் தளபாடக் கொள்வனவு | — 15,000/- |
| 29. | அராலி சரஸ்வதி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | — 15,000/- |
| 30. | அராலி முத்தமிழ் சனசமூக நிலையத் தளபாடக் கொள்வனவு | — 15,000/- |
| 31. | சுழிபுரம் வாணி நிகேதா சனசமூக நிலையத் தளபாடக் கொள்வனவு | — 15,000/- |
| 32. | அராலி களவத்துறை சனசமூக நிலையத் தளபாடக் கொள்வனவு | — 15,000/- |
| | | 300,0.000/- |

### ஆ) 1998 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து செய்யப்பட்ட வேலை விவரம்

1. சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள், விளையாட்டுப் பொருள்கள் கொள்வனவு — 25,000/-

மேற்குறிப்பிட்ட தளபாடங்கள், விளையாட்டுப் பொருள்கள் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரு. ந. திரிலோகநாதன் அவர்களால் விநியோகிக்கப்பட்டது.

2. 1999 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து பின்வரும் வேலைகள் நடைபெற உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலைய புதிய கட்டடம் | — 300,000/- |
| 2. | நிற்சாமம் சரஸ்வதி சனசமூக நிலையப் புனரமைப்பு | — 100,000/- |
| 3. | அராலி கிழக்கு கலைமகள் சனசமூக நிலைய தளபாட விநியோகம் | — 100,000/- |
| | | 5,00,000/ |

### இ) 1998 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து செய்யப்பட்ட வேலை விபரங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சுழிபுரம் இறாத்தலடி வீதி திருத்தம் | — 100,000/- |
| 2. | சங்கானை மீன் சந்தையில் மலகூடம் அமைத்தல் | — 50,000/- |
| 3. | பண்ணாகம் 02 ஆம் வீதி திருத்தம் | — 100,000/- |
| 4. | சுழிபுரம் கேணிக்கடவை வீதி திருத்தம் | — 30,150/- |
| 5. | பூதராசி முகாம் மலகூட திருத்தம் | — 13,000/- |
| | | 293,150/- |

### 2. 1999 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில்இருந்து பின்வரும் வேலைகள் நடைபெற இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1. | சங்கானையில் குழாய்க் கிணறு அமைத்தல் (நிற்சாமம்) | — 30.000/- |
| 2. | சங்கானை குளத்தடி வீதி புனரமைப்பு | — 250,000/- |
| 3. | முன்பள்ளிகளுக்கான தளபாட விநியோகம் | — 60,000/- |
| | | 340,000/- |

### ஈ) சபைநிதி வேலைகள் - 1998 ஆம் ஆண்டு செய்த வேலைகள் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | சங்கானை மீன்சந்தையில் குழாய்க்கிணறு திருத்தம் | — 1,750/- |
| 2. | பொன்னாலை நீர்விநியோகத்திட்ட வீதி திருத்தம் | — 60,000/- |
| 3. | தலைமையலுவலக கட்டடம் பிரிவிடுதல் | — 8,000/- |
| 4. | வட்டுக்கோட்டை நவீன சந்தை கூரை மாற்றல் | — 1,40,000/- |
| 5. | வட்டுக்கோட்டை தற்காலிக சந்தைக் கொட்டகை அமைத்தல் | — 80,000/- |
| 6. | சங்கானை மீன் சந்தையில் சைக்கிள் பாதுகாப்பு கொட்டகை அமைத்தல் | — 20,000/- |
| | | 3,09,750/ |

### சபைநிதி வேலைகள் - 1999 ஆம் ஆண்டு பின்வரும்வேலைகள் செய்து முடிக்கப்பட்டன

| | | |
|---|---|---|
| 7. | சத்தியக்காட்டுச் சந்தையில் பீலி அமைத்தல் | — 25 000/- |
| 8. | வட்டுக்கோட்டை உப அலுவலக சிறுவர் பூங்கா விளையாட்டு உபகரணம் திருத்தல் | — 3,000/- |
| 9. | தலைமையலுவலகத்தில் போட்டோ ஸ்ரற் மெசின் அறை அமைத்தல் | — 25,500/- |
| 10. | தலைமையலுவலகத்தில் உடைந்த சீலிங் சீற் மாற்றி அமைத்தல் | — 4,100/- |
| 11. | சத்தியக்காட்டுச் சந்தையில் மீன் சந்தைக் கூரைக்கு புதிய வளை பொருத்துதல் | — 1,500/- |
| 12. | சத்தியக்காட்டுச் சந்தையில் இறைச்சிக் கடைக்கு பட்டம் அமைத்தல் | = 950/- |
| 13. | துணவிக் கிணறு திருத்தம் | — 18,500/- |
| 14. | வலிகாமம் மேற்கு பிரதேசசபை வரவேற்கின்றது என்ற வாசகத்தை எழுதுதல். (கொங்கிறீற்) 06 இடங்களில் | — 45,000/- |
| 15. | சத்தியக்காட்டுச் சந்தையில் கை கழுவும் தொட்டி அமைத்தல் | — 6,000/- |
| 16. | சத்தியக்காட்டுச் சந்தையில் மீன் வெட்டும் தளம் அமைத்தல் | — 3,000/- |
| 17. | தலைமையலுவலகத்தில் தலைவரது அறைக்கு கதவு அமைத்தல் | — 1,800/- |
| 18. | வட்டுக்கோட்டை உப அலுவலகத்தின் சிமெந்து தளம் திருத்துதல் | — 23,500/- |
| 19. | வட்டுக்கோட்டை உப அலுவலக அறைக்கு உள் சீற் அடித்தல் | — 26,200/- |
| 20. | வட்டுக்கோட்டை உபஅலுவலக பொதுநூலகத்துக்கு உள்சீற் அடித்தல் | — 46.000/- |
| | | 2,30.050 |

### உ) 1. 1998 ஆம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை-வடக்கு (றாண்) நிதியில் இருந்து செய்யப்பட்ட வேலை விவரம்.

| | | |
|---|---|---|
| 1. | சங்கானை பஸ் நிலையக் கிணறு திருத்தம் | — 20,000/- |
| 2. | சுழிபுரம் கயட்டையோடை திருத்தம் | — 170,000/- |
| 3. | பண்ணாகம் காயா வீதி திருத்தம் | — 160,000/- |
| 4. | அராலி உலோகசிட்டி பிள்ளையார் வீதி திருத்தம் | — 170,000/- |
| 5. | வட்டுக்கோட்டை கலட்டி வீதி திருத்தம் | — 250,000/- |
| 6. | சங்கானை பிரான்பற்று 02 ஆம் ஒழுங்கைக்கு அணைச்சுவர் அமைத்தல் | — 250,000/- |
| | | 112,00,000/- |

2. 1999 ஆம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை— வடக்கு [றாண்] நிதியில் இருந்து பின்வரும் வேலைகள் நடைபெற்று முடிவடைந்தும், நடைபெற்றும்கொண்டிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1. | சங்கானை சந்தை மண்டப இல. 01 திருத்தம் | — 253,726.50 |
| 2. | சங்கானை சந்தை மண்டப இல. 02 திருத்தம் | — 278,325 00 |
| 3. | சங்கானை சந்தை மண்டப இல. 03 திருத்தம் | — 297,702 00 |
| 4. | சங்கானை மரக்கறிச் சந்தை மண்டப இல. 03 மேலதிக திருத்த வேலை | — 100,000 00 |
| 5. | சங்கானை சந்தையில் நிறுவைக் கொட்டகை அமைத்தல் | — 70 000.00 |
| | | 9,990.753 50 |

மேற் குறிப்பிட்ட வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு, வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரு ந திரிலோகநாதன் அவர்களால் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

]8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**YOGI HOME SCIENCE ACADEMY**

Fabric Painting புதிய வகுப்புக்கள் 09 – 08 – 99 அன்று திங்கள் முதல் ஆரம்பமாகும். 7 வகுப்புக்கள் மட்டும். சேரவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
( நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக )
[67877]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சரஸ்வதி நவரட்ணம்**
(இல. 14, பாடசாலை ஒழுங்கை, கொழும்பு: 03)

மலர்வு 21 – 06 – 1939
உதிர்வு 12 - 08 1998

திதி: 02 – 08 – 1999


எங்கள் அன்புத் தெய்வமே!
கண்களில் நீருடன் கலங்கி நிற்க
எமை விட்டுப் பிரிந்து சென்றது ஏனோ?
உடலால் எமை விட்டுப் பிரிந்தாலும்
உணர்வுகளால் என்றும் எம்முடன்
உங்கள் நினைவுகள் தொடரும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

75/A கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (67848)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 1935 02 - 02



ஆண்டவன் அடியில் 1996 08 03

அமரர்
**சூரியர் சிதம்பரப்பிள்ளை (C.T B)**
(ஓய்வுபெற்ற (C T B) பாதுகாப்பு உத்தியோகத்தர்
சங்கக்கடை ஒழுங்கை, துன்னாலை, கரவெட்டி)

திதி: 1999 – 08 – 02

ஆண்டு மூன்று ஆனதைய
ஆறிடுமா எம் துயரம்?
ஆலம் விழுது போல் உறவு ஆயிரம் வந்துமென்ன ஐயா
வேறென நீரிருப்பீர் வீழ்ந்து விடோம் என நினைத்தோம்
ஆடி அடங்கும் வாழ்க்கை இதுவென– எம்மைவிட்டு
அமைதி கொண்டீரோ ஐயா!
மீண்டும் இங்கு வாரும் ஐயா
விழித்தெம்மைப் பாரும் ஐயா;
உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

நின் பிரிவு தாங்காது துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

தகவல்:– சி. மதன்மோகன் (மகன்)
மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி
திடகம வடிசாலை, பருத்தித்துறை.

சங்கக்கடை ஒழுங்கை,
துன்னாலை, கரவெட்டி. (67747)

## வதிவுச் சான்றிதழ் விநியோகம்

வலி.கிழக்குப்பிரதேச சபையின் கீழ் உள்ள பாலர் பாடசாலைகளின் 48 ஆசிரியைகளுக்சான வதிவுச் சான்றிதழ்கள் வலி, கிழக்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து அண்மையில் பிரதேச சபையின் செயலாளர் செ. குகதாஸனால் வழங்கப்பட்டன.


யாழ், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி. தனேஸ்வரி பாஸ்கரன் இந் நிகழ்வுக்கு தலைமைவகித்தார். (ஐ–180)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம்
குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(67867)

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் பா. அகீசன்**

பாஸ்கர் – வசந்தி தம்பதிகளின் அன்புப் புதல்வன் செல்வன் அகீசன் தனது முதலாவது பிறந்த நாளை தனது அப்பா அம்மாவுடன் சுவிஸில் மிக விமர்சையாக ( 2 – 8– 1999 ) இன்று கொண்டாடுகின்றார்.

அகிஸ் குட்டியை

கைதடியைச் சேர்ந்த அப்பம்மா குடும்பத்தினர், துரைசிங்கம் குடும்பத்தினர் ஆகியோரும் கென்ஸ்மன் லேன் சாவகச்சேரியைச் சேர்ந்த டாக்டர் வ. சின்னப்பு குடும்பத்தினர், கரவெட்டியைச் சேர்ந்த அம்மம்மா குடும்பத்தினர் மற்றும் அனைவரும் பல்லாண்டு காலம் பல்கலையும் கற்று வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
இ. நவரத்தினம்.

'வைரசோதி'
கரவெட்டி.
(67855)

உ
துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை (இலங்கை)

# மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1999

### பிரதான உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம்: | ஆடி 29 ஆம் நாள் (14-8-99) | சனிக்கிழமை | மு. ப. 11 மணி |
| வேட்டைத்திருவிழா: | ஆவணி 05 ஆம் நாள் (22-8-99) | ஞாயிற்றுக்கிழமை | பி. ப, 2 மணி |
| சப்பறத்திருவிழா: | ஆவணி 06 ஆம் நாள் (23-8-99) | திங்கட்கிழமை | பி. ப. 3 மணி |
| தேர்த்திருவிழா: | ஆவணி 07 ஆம் நாள் (24-8-99) | செவ்வாய்க்கிழமை | காலை 9 மணி |
| தீர்த்தத்திருவிழா (ஆவணி ஓணம்) கொடியிறக்கம் | ஆவணி 08 ஆம் நாள் (25-8-99) | புதன்கிழமை | காலை 9 மணி |
| பிராயச்சித்த அபிஷேகம் வைரவர்சுவாமிபொங்கல் பூரணைத்திருவிழா | ஆவணி 09 ஆம் நாள் (26-8-99) | வியாழக்கிழமை | காலை 9 மணி பி. ப. 2 மணி மாலை 3 மணி |

### முக்கிய குறிப்புகள்

1. கொடியேற்றம், கொடியிறக்கம் பொது உபயமாக நடைபெறுவது வழக்கமாகையால் இவ்வுபயத்திற்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. பணமாகவோ, பவுணாகவோ அரிசி முதலிய அன்னதானப் பொருள்களாகவோ, அல்லது பூசை உபகரணங்களாகவோ அன்பளிப்புச் செய்வோர் அனைவரும் நிதி அலுவலகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். கோயில் நிர்வாகம் தவிர்ந்த எவருக்கும் கோயில் பேரில் அன்பளிப்புப் பெற அனுமதி வழங்கப்படவில்லை. எந்த அன்பளிப்பும் கோயில் அலுவலகத்திலேயே செலுத்தப்பட வேண்டும் அல்லது கடிதமூலமோ, வங்கி மூலமோ கோயிலுக்கு அனுப்பப்பட வேண்டும்.
3. கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடி அழித்தல், அங்கப் பிரதிட்டை பண்ணல் யாவும் வெளிவீதியில் நடைபெறுதல் வேண்டும். திருவிழாக் காலத்தில் பொங்கிப் படைத்தல், நேர்த்தி, திருமணம், தனிப்பட்டவர் அபிஷேகம் ஆகியவை இடம்பெறாது என்பதை அறியத் தருகின்றோம்.
4. பெண்களும், குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு குறைத்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது
5. சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு முரணாக உடைகள் அணிந்து வருவது தவிர்க்கப்பட வேண்டும்.
6. கோயிற் தரிசனம் முடிந்தவுடன் அவரவர் தத்தம் இல்லங்களுக்குச் சென்று விடுவது விரும்பத்தக்கது இரவு நேரங்களில் எவரும் கோயில் வீதிகளில் தங்குவதோ, பொழுது போக்குவதோ தவிர்க்கப்பட வேண்டும்.
7. மஹோற்சவம் பன்னிரண்டு தினங்களும் நண்பகல் 12.00 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

கோயிற் கணக்குடைய உள்ள வங்கிகள்:
- இலங்கை வங்கி, சுன்னாகம் க/கு இல. 3155
- வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் க/கு இல. 12692
- இலங்கை வங்கி, மல்லாகம்பிட்டி க/கு இல. 0370210586

**நிர்வாக சபை**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை. (சி/8381)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீர்வின் அவசியம்

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம் கொழும்பில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர்களில் ஒருவர். சிறந்த சட்ட அறிஞர். உலகப் பிரபல்யம் பெற்ற அரசமைப்பு நிபுணர். மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறையுடன் செயற்பட்டவர். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு அரசு தயாரித்துள்ள தீர்வுப் பொதியில் அடங்கிய திட்டத்தை வரைவதில் பெரும் பங்கு கொண்டவர்.

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் படுகொலையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் முதற்கொண்டு அமெரிக்க அரசு, இந்திய அரசு, ஜேர்மன் அரசு வரை கண்டித்துள்ளன, உள்நாட்டு அரசியல் மற்றும் சமயத் தலைவர்களும் கண்டித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது செய்தியில் — இத்துக்ககரமான இழப்பு, நாட்டின் தேசியப் பிரச்சினையைச் சுமுகமான அரசியல் தீர்வின் மூலம் தீர்க்க வேண்டிய அவசியத்தை மேலும் வலியுறுத்தி நிற்கிறது — என்று தெரிவித்துள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனை மேலும் தாமதிப்பது, பிரச்சினையை மேலும் கூர்மையாக்குவதுடன் குழப்பத்தையும் ஏற்படுத்தும். இதனால் மிதவாத சிறுபான்மைத் தலைவர்கள் இல்லாமற் போகும் சூழ்நிலை இருப்பதையும் மறக்கக்கூடாது — என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது செய்தியில் சுட்டிக் காட்டி உள்ளது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படாவிட்டால், அது விடயத்தில் மேலும் தாமதம் காட்டப்பட்டால், பிரச்சினை கூர்மை அடைவதனையும், குழப்பங்கள், வன்முறைகள் பெருகுவதையும் இது போன்ற இழப்புகள் நிகழ்வதையும் தடுக்க முடியாது என்பதனை உணர வேண்டிய நேரம் இது.

நீண்ட காலமாகத் தீர்வு ஒன்று காணப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதால் சமாதானம் விலகித் தொலைவில் நிற்கிறது. அவநம்பிக்கைகளும் அதனால் விரக்தியும் வெறுப்பும் வேதனையும் எல்லாத் தரப்புகளிலும் மேலோங்கி வருகிறது.

இதனைச் சம்பந்தப்பட்ட தரப்புகள், குறிப்பாக அரசாங்கமும் எதிர்க் கட்சியும், தெரிந்தும் தெரியாததும் போலச் செயற்படுகின்றன. சமாதான வழியில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்து அரசாங்கம் பதவிக்கு வந்து, இம் மாதம் 19 ஆம் திகதியுடன் ஐந்து வருடங்கள் கழிகின்றன. ஆனால் சொன்னது இன்னும் நடக்கவில்லை. அதற்கான முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. சமாதான வழியை மறந்து போர் மூலம் தீர்வு காண முனைந்து களைத்த நிலையில் நிற்கிறது அரசு.

இத்தகைய வழிமாற்றமும் தாமதமும் தொடரும்வரை வன்செயல்களும், அழிவுகளும் தொடரவே செய்யும். மக்கள் அச்சத்துடனும் பாதுகாப்பில்லாத நிலையிலுமே வாழ நேரிடுகிறது என்பதனை உணர்ந்து, உகந்த, நியாயமான தீர்வுமூலம் நீதியுடன் கூடிய சமாதானத்தை உருவாக்க முழு விருப்புடனும், நேர்மையுடனும், முனைப்புடனும், வேகத்துடனும் சகல தரப்பினரும் உழைக்க வேண்டும்.

சமாதானத்தை அதனூடான அமைதியைப் பெறும் பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் கண்டனங்களாலும் அடைந்து விடமுடியாது.

### நல்லூர் உற்சவம் இம்மாதம் 16 இல் ஆரம்பம்

# மாநகரசபை, தொண்டர் அமைப்புகள் இணைந்து வழமை போல் சேவை

கொழும்புத்துறை, ஓக. 2

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் போது வழமையான பணிகளை இந்த வருடமும் யாழ். மாநகர சபையும் தொண்டர் அமைப்புகளும் இணைந்து மேற்கொள்ள உள்ளன.

திருவிழாக்கால ஏற்பாடுகள் குறித்து கடந்த வியாழக்கிழமை நடை பெற்ற கலந்துரையாடலில் இது குறித்து ஆராயப்பட்டது.

மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் இந்த கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்தார்.

கடந்த காலங்களில் நல்லூர் உற்சவகாலத்தில் எவ்வாறு மாநகரசபையின் செயற்பாடுகள் அமைந்தனவோ அந்த அடிப்படையிலேயே இம் முறையும் இடம் பெறும் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

மாநகர சைவசமய விவகாரக்குழுவின் தொண்டர் முகாம் ஒன்று ஆலயச் சூழலில் அதிகாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணிவரையும் இயங்கும்.

இவர்களுடன் இந்துக்களும் தொண்டர் ஸ்தாபனங்களும், தமது வளங்களை இறை அர்ப்பணிப்பாகக் கொண்டு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பின்வரும் ஒழுங்குகள் குறித்து அன்றைய கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

★ திருவிழாவை முன்னிட்டு கோயில் சுற்றாடலில் உள்ள வீதிகள் புனரமைக்கப்படும்.

★ மின்சார வசதிகளை மாநகரசபை மேற்கொள்ளும்.

★ சுகாதார சேவைகளைச் சிறந்த முறையில் செய்வதுடன். முதலுதவிச்சிகிச்சை நிலையங்களை தொண்டர் தாபனங்களின் மூலமும் மாநகரசபையின் மூலமும் அமைப்பது.

★ வழமையான வீதித் தடைகளை அமுல் படுத்துவது.

★ ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களை கோயிலின் கிழக்குப் பகுதியில் மட்டுமன்றி மேற்குப்பகுதியிலும் அமைப்பது. ஏனைய விற்பனை நிலையங்கள் முன்னர் போல் அமையும்.

வீதிக்கு நீர் தெளித்தல், வீதிக்கு மணல் பரவுதல், வீதிப்பந்தல் அமைத்தல், திருவிழாக்கால தொண்டர் சேவை, சுத்திகரிப்பு சேவை, குடிதண்ணீர் விநியோகம், துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்கள், திருவிழாச்சந்தை என்பன குறித்தும் ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் சென்ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் சாரணர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் — யாழ், பிரிவினர், மக்கள் நலன்காக்கும் பிரிவினர், மாநகரசபை ஊழியர், ஆலய பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

நல்லூர் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா செப்ரெம்பர் 8 ஆம் திகதியும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், 10 ஆம்திகதி பூங்காவனத் திருவிழாகவு இடம் பெறும். [ஐ-30-111-17]

## திருத்தம்

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தண்ணீர் தாங்கியில் கிழக்குப் பக்கமாகவுள்ள கொழும்புத்துறை, பாசையூர் போன்ற இடங்களிலுள்ள நீர் விநியோக குழாய்கள் திருத்தம் செய்யப்பட்டு பொது நீர்க்கம்பங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் இந்த நீர் விநியோகப் பாதை புனரமைக்கப்பட்டு வருகிறது. (ஐ-5-17)

# யாழ். கூட்டுறவுச் சங்கத்தில் 'உ' அட்டைக்கு 10 கிலோ அரிசி

அரியாலை, ஓக. 2

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு பத்துக் கிலோ அரிசியை வழங்கி வருகின்றது

இந்த நாட்டரிசியை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்தின் சகல கிளைகளிலும் பெற்றுக் கொள்ளுமாறும் சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நாட்டரிசி கிலோ 31 ரூபா விலையில் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம்—

சமாசத்தால் தருவிக்கப்பட்ட நாட்டரிசியும் சங்கத்தின் கிளைகளில் கிலோ 38 ரூபா விலையில் பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

### நகரில் பலாலி வீதியில்

# ஆள்கள் இல்லாத சமயம் வீட்டில் பொருள் சூறை

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்ப்பாணம் அம்மன் வீதிக்கு அருகே பலாலி வீதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து பெறுமதி மிக்க பல பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

வீட்டில் யாரும் இல்லாத வேளை வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த ஒரு தொகைப் பணம், நகை உட்பட பெறுமதிமிக்க பல மின் உபகரணப் பொருள்களையும் எடுத்துச் சென்றுள்ளனர் —

சம்பவதினம் — கடந்த மாதம் 27 ஆம் திகதி — வீட்டின் உரிமையாளர் குடும்பத்தினருடன் காரை நகரிலுள்ள அவர்களது உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு மீண்டும் கடந்த 30 ஆம் திகதி வீடு திரும்பிய போது வீட்டில் பொருள்கள் களவு போயிருந்தமை தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-9-ரி)

## நாளை

ஆடி 18

செவ்வாய்க்கிழமை

திதி: ஷஷ்டி

நண்பகல் 12.57 வரை

நட்சத்திரம்: ரேவதி

பிற்பகல் 3.45 வரை.

சுபநேரம்: 10.34 – 12.04

ராகுகாலம்: 3.04 – 4.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உலகம் அழிவதற்கு பெண் காரணமாகஇருந்தால் அவள் ஒருத்தியால்தான் உலகத் [illegible]

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்ப்பாணம்திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9.30 மணிக்குத்தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க—30)

★ ★ ★

வலி. கிழக்கு, ஓக. 2

கல்வியங்காடு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்தத்திருவிழாவும் நடைபெறும். (க-180)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஓக. 2

மாரீசன் கூடல் புனித கைத்தார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி காலை திருப்பலிப் பூசையும், திருச்சுருவப் பவனியும் இடம் பெறும்.

இளவாலைப்பங்குத்தந்தை அருள்திரு. அன்ரனி பாலா அடிகளார் இதற்கானஒழுங்குகளை செய்துள்ளார்

(ஐ—135)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 2

சாவகச்சேரி விளைவேலி தாளையம்பதி ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை10 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

மஹோற்சவக் கிரியைகள் ஆலய பிரதமகுரு கிரியாகான கலாமணி சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறும், (க-117)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணை கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிகிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10 00 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10.00 மணிக்குத்தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 2

பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 11.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10.00 மணிக்கு சுழிபுரம் திருவடி நிலை புனித தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க—28)

★ ★ ★

மீசாலை கிழக்கு காட்டுவளவு நெல்லியடிக் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்குத்தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று காலை 8.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 2

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்த ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 13ஆம்திகதி காலை ஆயிரத்து எட்டு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (க-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 2

ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

(க-ரி)

★ ★ ★

நெடுந்தீவு மேற்கு புனித லோறஞ்சியார் தேவாலய உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருப்பலி பூசை சுற்றுப் பிரகாரம் என்பவற்றுடன் உற்சவம் நிறைவுறும் நெடுந்தீவு பங்குத் தந்தைஅருட்திரு எம் மொன்பெட் அடிகள் திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுப்பார். (க-111)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 2

சங்கானை தெற்கு ஓடக்கரை விசாலாக்ஷி சமேத ஸ்ரீ விஸ்வநாதசிவன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

உற்சவக் கிரியைகளை சிவாகம கிரியாரத்தினம் சிவப்பிரம்ம ஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார் மேற்கொள்வார்.

உற்சவ காலங்களில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை 'அறிவியல் நோக்கில் ஆன்மீகம்' எனும் பொருள் பற்றி பிரம்மஸ்ரீ கா ர கு சிவராஜ சர்மா தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(க-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் செல்ல அனுமதி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட், 2

குடாநாட்டில் இருந்து கப்பல் மூலம் வெளியிடங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டிருப்போரின் பெயர்களை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் வெளியிட்டிருக்கிறது.

ஜூலை 20 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரங்களே இதுவாகும்.

அவை வருமாறு:

## உடுவில்

என். வைரவநாதன் (082770 ஏ), வீ. சொரூபன் (082770 பீ), வீ. சொரூபி (082770 சீ) ஏ. கலாவதி (082775 ஏ), ஏ. கபின்சன் (082775 பீ), கே. நவரட்ணம் (089818 ஏ), கே. நவரட்ணம் (093146 ஏ), என். செல்லத்துரை (096897 பீ), எஸ்.செல்லம்மா(096897பீ), எஸ். குகதாசன் (096897சீ).

எஸ். கவிதா(097174 ஏ), எஸ். ரட்ணம் (097616ஏ), எஸ். சிலோமினா (097616 பீ), எஸ். கௌரீசன் (097616 சீ), வீ. சின்னப்பா (097628 ஏ), பீ. சந்திரபாலன் (097645 ஏ), கே. சந்திரபாலன் (097645பீ), கே. சந்திரபாலன் (997645 சீ), பீ. நல்லநாதன் (097649ஏ).

பீ. செல்வகுமார் (097716 ஏ), எஸ். சங்கீதா (097716 பீ), எஸ்.சந்திராணி(097716 சீ), என். ரவீந்திரன்(097754 ஏ), கே. கந்தப்பு (097757 ஏ),கே. உதயகுமார்(097759 ஏ), யூ. உஷாநந்தினி(097759 பீ), யூ. தயாசந்திரிகா (097759சீ), ரீ. மகேஸ்வரன் (097760ஏ),எம்.கேதீஸ்வரன் (097760பீ),

எல். உதயகலா (097765 ஏ), எல். உதயகலா(097765 பீ), எஸ். குணசேகரம் (097767ஏ), கே. ஜெசிந்தன் (097767பீ), கே. ஜெசிந்தன் (097767சீ), ரீ. ரவிக்குமார் (097770ஏ),ஆர்.ரத்னரூபன் (097772ஏ), பீ.செல்வராசா (097773ஏ), என். விமலாதேவி (097773பீ), என். சிறிறட் (099441ஏ), என். ஜெயரூபன் (100839ஏ), என். ஜெனாதன் (100839பீ),

என். சந்திரகமல் (101685 ஏ),எல்.காந்தவனம்(101691 ஏ), எச். சோமதாசா (101699ஏ), ரீ. ராசையா (101700ஏ), எஸ் குலராணி (101711ஏ), எல். காத்தவன் (101805ஏ), எம். தயாவதி (101805ஏ),எஸ். சின்னப்பா (101835ஏ), ரீ. குழந்தைவேலு (104140ஏ),

ஏ. அரவிந்தன்[104188ஏ], எம் தனபாலசிங்கம்[104193 ஏ], நீ. சுதாஸ்கரன்[104193 பீ], எஸ். நாகமுத்து[109645 ஏ],எஸ்.சசிகாந்தன்[083468 ஏ],என்.கருணாநிதி[091817 ஏ],என்.கருணாநிதி[091817 பீ],எஸ்.புஷ்பநாதன்[094546 ஏ], வீ.செல்வதுரை[099228 ஏ].

எஸ். வீ.தயாபரம்[100064 ஏ], என்.சூரியகுமார்[100073 ஏ], ரீ. சதீஷன் [100074ஏ], என். சாந்தமலர்[101361ஏ], ஏ. ராமகிருஷ்ணா [101597 ஏ], என். செல்வநாயகம் [101951ஏ], ராசுவரதராசா [101962ஏ], எஸ். மயில்வாகனம் [101962பீ], வரதராசா வினஜா [101962சீ], வரதராசா விரதினி[101962டீ].

எஸ். அரசராசன் [101971 ஏ],பீ. தனராஜா[102052ஏ], ரீ. பத்மநாதன் [102114ஏ], என்.ஆசீர்வாதம்[102141ஏ], எம். குமாரசாமி[102144ஏ], ஆர்.குமாரசாமி[102144பீ], எஸ். சிவகுமார் [102161ஏ] ரீ. புஷ்பராணி [102182ஏ], எஸ்.தில்லையம்பலம்[103263 ஏ], என். அருமைநாயகம் [103276ஏ].

கே. கருணாநிதி (103276 பீ), எஸ். ரத்னம் (103296 ஏ), ஏ. ரத்னம் (103296 பீ), என். லவனேஸ்குமார் (103296 சீ), எஸ்.லவனேஸ்குமார் (103296 டீ), எல். நிதர்ஷா (103296 ஈ), கே. ஆனந்தகுமாரராசா (103302 ஏ), டபிள்யூ. ராசம்மா (193323 ஏ), ஆர். பஞ்சலிங்கம் (103419 ஏ), பீ. விக்னேஸ்வரி (103420ஏ), எஸ். பிரபாகரன் (103422 ஏ).

எம். செல்லதுரை (103454 ஏ), எஸ். கதிர்காமதேவி (103454 பீ), என். வேவி (103469 ஏ), டபிள்யூ. சசிகா (103469 சீ), ரீ. சந்திரா (103489 ஏ), ஏ. வீரசிங்கம் (103523 ஏ), கே. வீரசிங்கம் (103523 பீ), சந்திரபிள்ளை (103552 ஏ), சீ. கஜந்தி (103552 பீ) எஸ். பிரியசூடி (103560 ஏ), கே. பொன்மலர் (103560 பீ).

கே. பிரியசோதி [103560 சீ], பீ. விஜிந்தன் (103560 டீ], கணேசமலர் [103588 ஏ], பேபி சிறீபியா(103588 பீ], கே. ஏ. கனகசபாபதி [103609 ஏ],எஸ். துரைராசசிங்க[103623 ஏ] எஸ். சின்னத்தம்பி [103640 ஏ], எஸ். லிங்கநாதன் [103659 ஏ], பி. சனிலா [103660 ஏ], கே. குமரேசு [103677 ஏ], ஆர். அருமதுரை [103688 ஏ].

ரீ. ராசையா (103689ஏ), வீ. ராசையா (103689பீ), எம். சுதர்ஷனி 103692ஏ), எஸ். சந்திரசேகரம் (103694 ஏ), சீ. சிவமணி (103694பீ), சீ. சந்திரரூபி (103694சீ), டபிள்யூ. கந்தசாமி (103713 ஏ), கே. சிவலிங்கம் (105064 ஏ), ஏ. தங்கலோகினி (105081ஏ). ஏ. புஷ்பராஜினி (105097ஏ), டபிள்யூ. சுதர்ஷனி (105097பீ),

டீ. ராசம்மா (105100ஏ), ஜே. தர்மலிங்கம் (105100 பீ), ஜி. பொன்னம்பலன் (105110ஏ), பீ. தவலோகநாயகி (105110பீ), ரீ. வல்லிபுரம் (105155ஏ), ரீ. ஜெயராஜா (105155பீ), பீ. மோகனாஞ்சலி (105156ஏ), ரீ. சந்திரன் (105194ஏ), வீ. சுப்பையா (105206ஏ), எல். வைத்திலிங்கம் (105206 பீ),

ஆர். நகுலேஸ்வரன் (105220ஏ), எஸ். சந்திரகலா (105226ஏ), கே. ஜெயரூபன் (105226பீ), ஜே. கபிராஜா (105226சீ), பீ. கந்தவேஸ்வரங்கன் (105289ஏ), ஆர். விமலாதேவி (105762ஏ), எஸ். தீசன் (105762பீ), எஸ். சுஜீவன் (105762சீ), எஸ் கஜேந்தினி (105821 ஏ).

பீ.அருளப்பன் (105887ஏ), ரீ.மோனதாஸ் (105891ஏ). ரீ.கந்தையா (105924ஏ), ஏ, ஜெசுபாகரன் (105924பீ)9 ஆர்.வசந்தகுமாரி [105926 ஏ], ஆர்.லக்ஷிகா [105929 பீ], ஜ.சோமந்தரம் [10599, ஏ[, ஏ.ஜெயகலா [106000ஏ]. ரீ. றதி [106022ஏ[, என் தவநீதா [106041ஏ].

கே. மாணிக்கம் (106115 ஏ), ரீ. தவராசா (106125 ஏ) ஜே. நாதன்சிங்கம் (106175 ஏ), ஆர். நிரஞ்சனி (106176 ஏ),எஸ். விக்னேஸ்வரராஜ் (106194 ஏ), என். தவராசா (106204ஏ) ரீ. யோகம்மா (106204 பீ), ரீ. தனிஸ் (106204 சீ). ரீ. விஜிதா (106204 டீ, ரீ. கனிஸ்ரா (106204 ஈ), கே. சின்னப்பிள்ளை (106208 ஏ), வீ. பாலகிருஷ்ணன் (106225 ஏ), ரீ. வசந்தமலர் (106246 ஏ), எஸ். நந்தகுமார் (108614 ஏ) ரீ. மகேஸ்வரன் (108614 பீ), கே. சிறிஸ்கந்தராஜா (108614 சீ), எஸ். குமாரரட்ணம் (108614 டீ)

ரீ.வேலும்மயிலும் [108614 ஈ[, கே.மகேஸ்வரன் [108614 எவ்], ஏ. அப்புலிங்கம்[108614 ஜி], எம்.பத்பநாதம்[108614 எச்], ரீ. ஆனந்தராஜா [108614ஐ], ஜே. குலசிங்கம் [108614ஜே], கே. விஜபா [108614கே], ஆர்.ராஜதுரை [108614எல்).

ரீ. தேவராஜப்பிள்ளை (108614எம்), ஜே. பாலச்சந்திரன் (108614என்), வீ. நரேந்திரா (108614ஓ). எஸ். வீ. மதுசிறிமணி(108614பீ), என். கிவராஜன் (108614 கியூ), பீ. நந்தகுமார் (108614ஆர்), என். சிற்றம்பலநாதன் (108614எஸ்), வீ. பத்மநாதன் (108614ரீ), என். குலதுங்கசேகர (108614யூ),

பீ. கமலகரன் (108631ஏ), ஆர். நற்குணவதனி (108631 பீ), ஆர். இந்திராணி (108675ஏ), எஸ். ஜெனிற்றா (108684ஏ). என். சந்திரா (108699ஏ), எஸ். குகதாசன் (108747ஏ), ஜே. குகதாசன் (108747பீ), கே. பிரசாந் (108747சீ), எஸ். மனோன்மணி (108837ஏ), எஸ். சிவம் (108837பீ), ஆர். வைத்திலிங்கம் (109004 ஏ), டீ. எஸ். சீ. சிவநாயகம் (111816ஏ), எம். திலகவதி (112201ஏ).

## யாழ்ப்பாணம்

பீ. தனபாலசிங்கம் [088383ஏ], எம். திரேசா [088385 ஏ], டுலோய் [088385 பீ], ஜ. உதயமதி [090453 ஏ], ஏ. இருதயநேசன் [090453 பீ], எம். செல்வராதனசின் [094218 ஏ]. எம். ஜே. தோமஸ் [094218 பீ], வீ. நாகரட்ணம் [095880 ஏ], என். கமலவள்ளி [095880 சீ].

என். பாமினி [095880டீ], எல். டிலானி [096191 ஏ], எம். ஆர். அல்பேட் [096192 ஏ], வீ. மைக்கல் [098549 ஏ], ரீ. ஏ. அனோஜா [098549 பீ], எஸ். சுசீலா [098563ஏ], எஸ். கந்தசாமி [098638 ஏ], எம். அழகேந்திரன் [098734 ஏ]. ஆர். தவலோசினி [098763 ஏ].

ஆர். கிறிசோக் [098763 பீ], ஆர். கெனர் [098763 சீ], எஸ். பரராசசிங்கம் [098793ஏ], ரீ. சிவயோகம் [100000ஏ], ஏ. யேமிஸ் [100501ஏ], பீ. சி. திரேசா [100501பீ], ஆர். நிரோஜினி [100501சீ], டீ. ஜே. மேனஸ் [100502ஏ[.

டீ. ஜே. டன்ஸ்ரன் [100503ஏ], எஸ். திரேசம்மா [100648ஏ], சீ. அந்தோனிப்பிள்ளை [100676 ஏ], ஏ பிரான்சிபா [100676 பீ], எஸ். பிரபாநாயகம் [102305டீ], எஸ். ஜெயக்குமார் [102305ஈ], எஸ். ஜெயக்குமார் [102305எவ்], எஸ். கணேசமூர்த்தி [102334ஏ], ஜே. வரதரூபன் [102334பீ].

எம். குணரட்ணம் (102354 ஏ),ஜே. சந்திரகலா (102354 பீ), எம். ஈஸ்வரி (102354 சீ), பீ. ஜெயக்குமார் (102408ஏ), ரீ. சின்னத்தம்பி (102425 ஏ), ரீ. தனலச்சுமி (102425 பீ), எம். குமாரசாமி (102495 ஏ).

எஸ். தங்கராஜ் (102504 ஏ), ரீ. யோகேஸ்வரி, (102504 பீ). ரீ. கிருஷாந்தி (102504 சீ), ஈ. தேவதாஸ் (102533 பீ). எஸ். மாலதி (102536 பீ), ஆர். இருதன்ராஜ (102536சீ),வை.ராணி (102548 ஏ), ஜே கிறிஸ்துராணி (102548 பீ). ஏ. ஞானப்பிரகாசம் (102553 ஏ), கே. ராமபிள்ளை 102556 ஏ).

கே. சிவபாக்கியம் (102556 பீ), எம். நாகராசா (102638 ஏ), என்.குமாரசாமி(102648 ஏ), ரீ. நவரட்ணராஸ் (102668 சீ), ரீ. நவரட்ணராஸ் (102668 டீ), எஸ். யேசுதாசன் (102686 ஏ), எஸ்.மதிவதனி (102686 பீ), வை. தங்கரட்ணம் (102686 சீ), எஸ். மைனம்பால் (102693 ஏ),

எஸ். சசிகரன் (102693 பீ), எஸ் செந்தில்ராஜ் (102693 சீ), என். அஜிதா (102699 பீ), எம் மகேஸ்வரி (102699 சீ), எஸ், நடராசா (102716ஏ),எஸ். கந்தரம்மா (104455 ஏ), பீ. சுமித்ரா (104455 பீ), பீ. வினோத் (104455 சீ).

எம். நாகம்மா (104457 ஏ), எஸ். எம். குருக்கள் (104475ஏ), எவ், எச். பெனாண்டோ (104478ஏ), ரீ. பத்மதேவி (104578ஏ), ரீ. தனஞ்சன் (104578பீ), ஏ. ஆர். ஜெயகௌரி [104578சீ],ஏ.ஆர். நிஷாந்த [104578டீ], ஆர். செல்லையா [104582ஏ], சீ. ரீ. ரட்ணசிங்கம் [104582பீ].

(தொடரும்)

(ஐ-ரி)

# வலிகாமம் மேற்கு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 6. | சுழிபுரம் இறாத்தலடிக் கிணறு திருத்தம் | — | 26,000/- |
| 7. | சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலைக்கு அண்மையில் உள்ள கிணறு திருத்தம் | — | 18,000/- |
| 8. | தொல்புரம் பத்தானைக் கேணியடி கிணறு திருத்தம் | — | 14,000/- |
| 9. | சங்கானை மாளிகாவத்தை விளையாட்டு மைதானக் கிணறு திருத்தம் | — | 16,000/- |
| 10. | சங்கானை குடியேற்றத்திட்டக் கிணறு திருத்தம் | — | 25,000/- |
| 11. | வட்டுக்கோட்டை அற்கின்சன் வீதிக் கிணறு திருத்தம் | — | 15,000/- |
| 12. | வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டக் கிணறு திருத்தம் | — | 17,000/- |
| 13. | வட்டுக்கோட்டை பங்குரு வயிரவர் கோயிலடி கிணறு திருத்தம் | — | 16,000/- |
| 14. | அராலி பெண்ணடாட்டிக்குள கிணறு திருத்தம் | — | 23,500/- |
| 15. | அராலி செம்மணத்தி வீதிக் கிணறு திருத்தம் | — | 21,500/- |
| 16. | அராலி குமுக்கண் கிணறு திருத்தம் | — | 38,000/- |
| | | | 2,30,000/- |

(உ) குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள்

ஐரோப்பிய சமூக மனிதாபிமான அமைப்பு (என்ஹோ), ஜி.ரி.சற் நிறுவனம் ஊடாக எமது சபைக்குரிய பின்வரும் நீர்த்திட்டங்களை புனரமைப்புச் செய்து உதவியது.

1. அராலி வடக்கு நீர் விநியோகத் திட்டம்
2. பொன்னாலை நீர் விநியோகத் திட்டம்

வே. மகேந்திரன்
உப தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

ந. திரிலோகநாதன்
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

((சி/83

# நல்லூர் உற்சவத்துக்கு முன் இந்து விடுதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 2

கடந்த ஆண்டு இடம்பெற்ற குண்டுவெடிப்பினால் சேதமடைந்த யாழ். மாநகர சபை இந்து விடுதிக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

நல்லூர் உற்சவ காலத்தில் மாநகரசபையின் உற்சவ காலப் பணிமனையாக இயங்கக்கூடிய வகையில் இந்த விடுதிக் கட்டடத்தின் புனரமைப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குண்டு வெடிப்பால் சேதமடைந்த கட்டடத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்கு வேண்டிய நிதி உதவி வழங்கப்படாததை அடுத்து ஒரு பகுதி புனரமைப்பு வேலைகளைச் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் யாழ். மாநகரசபை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை அலுவலகம் தற்போது இயங்கிவரும் பண்டாரக்குளம் அலுவலகத்தில் காணப்படும் இட நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காகவும் —

இந்து விடுதிக் கட்டடம் மேலும் சேதமடையாமல் பாதுகாப்பதற்காகவுமே —

கட்டடப் புனரமைப்பு வேலைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஐ-6-9]

# கருத்தரங்கு

பருத்தித்துறை, ஒக. 2

வடமராட்சிகல்வித்திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஒழுங்கு செய்துள்ளது. சகல பாடசாலைகளிலுமிருந்து ஒரு ஆசிரியரைத் தெரிவு செய்து அனுப்புமாறு, வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(ஐ-118-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவைப் போராயுதமாகப் பயன்படுத்தும்

# மனித உரிமை மீறல்கள் இலங்கையில் மட்டுமே!

## இறைவேண்டல் நிகழ்வில் மதகுரு

யாழ்ப்பாணம், ஒக. 2

வன்னிப் பகுதியில் மக்கள் பட்டினியால், நோயால் இறந்து கொண்டிருக்கும் வேளையில் அரசு வன்னி மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பாது உணவை ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. அத்துடன் வன்னிக்கான போக்குவரத்தையும் அரசு இராணுவத்தின் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. இவை மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் ஆகும். இவை சர்வதேச ரீதியிலும் மனித உரிமை மீறல்களாகவே கணிக்கப்படுகின்றன.

வன்னிப் பகுதியில் வாழும் மக்களின் துன்ப துயரங்கள் விரைவாக நீங்க வேண்டும் என்று கோரி யாழ் மரியன்னை பேராலயத்தில் நேற்று இடம்பெற்ற இறைவேண்டல் பிரார்த்தனையில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அருட்திரு. ஆர். ரவிச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த ஜூன் 26 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை வன்னிப்பகுதிக்குச் செல்வதற்கான சகல பாதைகளும் மூடப்பட்டுள்ளன. இதனால் அங்கு உணவு, மருந்து என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அங்குள்ள மக்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். போக்குவரத்துகள் இன்மையால் அவசர நோயாளர்களை வெளியிடங்களுக்குக் கொண்டு சென்று சிகிச்சையளிக்க முடியாத நிலையில் நோயாளர்கள் இறக்கும் நிலை வன்னியில் இன்று ஏற்பட்டுள்ளது. இதனால் வன்னியில் பேரழிவுகள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

பனடோலுக்குக் கூட வன்னியில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆஸ்மா போன்ற நோய்களுக்கான மருந்து முற்றாக முடிவடைந்தநிலையில் எந்தவித சிகிச்சையும் வழங்க முடியாத நிலையில் வைத்தியசாலைகள் காணப்படுகின்றன

பொருள்களின் விலை அதிகளவில் உயர்ந்துள்ளது. பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, சீனி நூறு ரூபாவுக்கு மேல் விற்பனையாகின்றது. மண்ணெண்ணெய் ஒரு போத்தல் நூறு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் வன்னியில் பணப்புழக்கம் அற்ற நிலை தோன்றியுள்ளது

சிறு பிள்ளைகளுக்கான பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இளம் சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசு ஓர் இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

வன்னியில் நெல் பயிரிடப்படுகின்ற போதும் ஏனைய உணவுப் பொருள்கள் எதுவும் அற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அரசு உணவை ஒரு போராயுதமாகப் பாவிக்க முனைகின்றது. இது மிக மோசமான மனித உரிமை மீறல் ஆகும்.

அது மட்டுமன்றி போக்குவரத்துக்கு தடையை ஏற்படுத்தி அதையும் இராணுவ ரீதியில் ஆயுதமாகப் பயன்படுத்த அரசு முனைகின்றது. இவை சர்வதேச ரீதியிலும் ஒரு மனித உரிமை மீறல் செயற்பாடாகவே கணிக்கப்படுகின்றது.

வன்னி மாணவர்களின் பரீட்சை நல்ல முறையாக நடைபெறவும் அங்குள்ள மக்களின் துன்பங்கள் விரைவாக நீங்கவும் நாங்கள் ஆண்டவரை வேண்டிக் கொள்வோம் என்றார்.

(இ-9-ரீ)

## கிராம அலுவலர் பிரிவுகளை சீரமைக்க மக்களின் ஆலோசனை

கொழும்பு, ஒக. 2

நிர்வாக அபிவிருத்தித் தேவைகளுக்காக புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவது தொடர்பாகவும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மறுசீரமைப்பது தொடர்பாகவும் பொது மக்களின் பிரேரணைகளை பரிசீலனை செய்து விதப்புரை செய்வதற்காக அரசு ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.

சுகாதார அமைச்சின் முன்னாள் நிரந்தரச் செயலாளர் டி. எல். வி ஏ. ஏ. பனம்பலானவைத் தலைவராகக் கொண்டு இந்தக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது,

புதிய பிரதேச செயலகப் பிரிவுகளை அமைப்பது தொடர்பாகவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உருவாக்கி மறுசீரமைப்பது தொடர்பாகவும் எழுத்து மூலம் தமது ஆலோசனைகளை பொதுமக்கள் இக்குழுவுக்குச் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான ஆலோசனைகளை 'செயலாளர், புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதும் கிராம சேவகர் பிரிவுகளை மறுசீரமைப்பதற்குமான குழு, அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, சுதந்திர சதுக்கம் கொழும்பு — 07'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் ஆலய சூழலில் துப்புரவுப் பணிகள்

யாழ்ப்பாணம், ஒக 2

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலயசுற்றாடல் பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணியை யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

ஆலயத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் புல் பூண்டுகள் வெட்டி அகற்றப்பட்டும் வீதியோரங்களில் காணப்படும் குப்பைகள் அள்ளப்பட்டும் வருகின்றன. அத்துடன் ஆலயப் பகுதியில் உள்ள கால்வாய்களும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

உற்சவ காலத்தின்போது ஆலயத்துக்கு வரும் அடியார்களின் நன்மை கருதி நல்லூர் இந்து விடுதியின் பின்புறமாகவுள்ள பொது மலசலகூடங்களும் புனரமைப்புச் செய்யப்படுகின்றன.

இதேவேளை —

இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக மேலும்பல புதிய மலசல கூடங்களை அமைக்க தீர்மானித்துள்ளதாகவும், உற்சவகால பணிமனை ஒன்றை இந்து விடுதியில் அமைக்கவுள்ளதாகவும் யாழ். மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9-6-30-17)

## மாவிட்டபுரத்தில் திருக்கார்த்திகை உற்சவம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்றுவரும் மஹோற்சவத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை திருக்கார்த்திகை உற்சவம் நடைபெறவிருக்கின்றது.

தற்சமயம் நடைபெறும் உற்சவத்தில் தினமும் ஏராளமான பக்தர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

இந்த உற்சவத்தில் பக்தர்கள் கலந்து கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## கடைகளை திறக்க உத்தரவு

அச்சுவேலி பொதுச் சந்தையில் அமைந்துள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான — குத்தகைக்கு விடப்பட்டு தற்போது பூட்டப்பட்டுள்ள — 10 கடைகளை உடன் திறந்து பொது மக்களின் சேவைக்கு விடுமாறு வலி. கிழக்குப் பிரதேச சபை குத்தகைக்காரர்களுக்கு அறிவித்துள்ளது.

இந்த 10 கடைகளையும் திறந்து வியாபாரம் செய்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவே குத்தகைக்கு விடப்பட்டன என்றும் —

ஆனால் இந்தக் கடைகள் நீண்ட காலமாகத் திறக்கப்படாமல் இருப்பதாகவும் —

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-180)

## நீதிவான் முன் வாக்குமூலம் அளிக்க விரும்பிய படையினர் பின்னர் மறுப்பு

மன்னார், ஒக. 2

மன்னார்ப் பகுதியில் அண்மையில்,இடம்பெற்ற கொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவு, ஆள் கடத்தல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினரில் இருவர் மன்னார் நீதிவான் முன்னிலையில் சுய விருப்பத்தின் பேரில் வாக்குமூலம் அளிக்க விருப்பம் தெரிவித்தனர், எனினும் நீதிவான் முன்னிலையில் அவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது வாக்குமூலம் அளிக்க மறுத்து விட்டனர்

மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற ஆறு இளைஞர்களின் மரணம் மற்றும் ஒரு முஸ்லிம் பெண்ணின் தற்கொலை, ஓர் இளைஞனும் அவரது கர்ப்பிணித் தங்கையும் காணாமற்போனமை, பள்ளிமுனை ஜுடா காமலிற்றா என்ற இளம் பெண்ணின் கொலை ஆகியன தொடர்பாக மன்னாரிலுள்ள இராணுவ முகாம் ஒன்றின் பொறுப்பதிகாரி உட்பட பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டு இராணுவ இரகசியப் பொலீஸாரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பவர்களில் இரு இராணுவத்தினர் தாம் மன்னார் நீதிவான் முன்னிலையில் சுயவிருப்பத்தின் பேரில் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து இருவரும் தனித்தனியாக மன்னார் மாவட்ட நீதிவான் மா. இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அச்சமயம் இருவரும் வாக்குமூலம் அளிக்க விரும்பாததை அடுத்து இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (இ-3-க)

## தென்மராட்சியில் கசிப்பு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 2

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து தென்மராட்சியில் கசிப்பு ஒழிப்புநடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டுவில், நுணாவில், கைதடி போன்ற இடங்களில் அண்மையில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்கள் முற்றுகையிடப்பட்டு கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் யாவும் உடைத்தெறியப்பட்டதுடன் கசிப்பு மற்றும் கோடா போன்ற உற்பத்திப் பொருள்களும் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டன.

மட்டுவில் தெற்குப் பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் 10 போத்தல் கசிப்பும், மட்டுவில் முகூறிப் பகுதியில் 300 போத்தல் கசிப்பும், நுணாவிலில் 190 ஆம்கட்டைப் பகுதியில் 600 போத்தல் கோடாவும், கைதடி வடக்கில் 600 போத்தல் கோடாவும், 2 போத்தல் கசிப்பும், கைதடி மத்தியில் 46 போத்தல் கள்ளும் கைதடி தெற்கில் 46 போத்தல் கள்ளும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

தென்மராட்சிப் பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் பனை தென்னைவள கூட்டுறவுச்சங்கம் தொடர்ந்தும் ஈடுபடும் என்றும் —

இவ்வாறான உற்பத்தியாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

இச்சங்கத்தின் தலைவர் சி. பூபாலசிங்கம் தெரிவித்தார். (ஐ-5)

## நீலன் மீது தாக்குதல் நடத்தியவர் நொண்டிபோல் திரிந்ததை கண்டேன்

### ஓட்டோ சாரதி பொலிஸாருக்குத் தகவல்

கொழும்பு, ஒக. 2

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவரான நீலன் திருச்செல்வத்தை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் கொலை செய்த நபர் ஊன்றுகோலுடன் நொண்டி போன்று வேடமிட்டு சம்பவம் நடந்த இடத்தில் இரண்டு மூன்று நாள்களாகத் திரிந்தார் என அந்தப் பகுதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதி ஒருவர் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பயங்கரவாத ஒழிப்புப் பிரிவுப் பொலீஸார் சம்பவம் நடந்த இடத்தில் பலரை விசாரணை செய்தனர்.

நொண்டி போன்று திரிந்த அந்த நபரை தான் நேரில் சந்தித்ததாகவும்—

அவரது முகம் தமக்கு நன்றாக நினைவிருக்கின்றது என்றும் — அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதே நேரம்—

நீலன் திருச்செல்வத்துக்கு கொலைப் பயமுறுத்தல் இருப்பது குறித்து தாங்கள் அவரது கவனத்துக்குக் கொண்டு வந்ததாகவும்—

அச்சமயம் அவர் ''விடுதலைப் புலிகள் ஒருபோதும் என்மீது தற்கொலைத் தாக்குதலை நடத்த மாட்டார்கள். அப்படியான ஒரு தலை அவர்கள் பாரிய நடவடிக்கைகளுக்கே பயன்படுத்துவர். புலிகள் என்னைக் கொல்வதாயின் துப்பாக்கி கொண்டே தாக்குவர்'' என்று தெரிவித்திருந்தார் என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் மூலம், நீலன் மீது தாக்குதல் இடம்பெறலாம் என்ற தகவல் தெரியவந்தது என்றும்—

அந்தத் தகவலை அடுத்து அவருக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது என்றும் — பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

## மானிப்பாய் அபிவிருத்தியை ஒருங்கிணைக்கக் குழு

மானிப்பாய், ஒக. 2

மானிப்பாய் பிரதேசத்தில்சகல அபிவிருத்தி முயற்சிகளிலும் ஈடுபட்டு பொது மக்களுக்குச் சேவை செய்வதற்கென ஒரு சபை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

'மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகாரச் சபை' என்ற பெயர் கொண்ட இச்சபைக்கு சட்டத்தரணி இ. வசந்தசேனன் தலைவராகவும் உபதலைவராக மருதடிவிநாயகர் ஆலய தர்மகர்த்தா த. சிதம்பரநடராஜாவும், செயலாளராக ஓய்வுபெற்ற அதிபர் இ. வல்லிபுரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கடந்த மாதம் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே இச்சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

(ஐ-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னியில் கால்நடை நோய்

வவுனியா, ஒக. 2

இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் பரவுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக வருட இறுதி மாதங்களில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் வருவது வழமை என்றும்—

அதன் முன்னேற்பாடாக ஒவ்வொரு வருடமும் ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் தடுப்பூசி ஏற்ற வேண்டும் என்றும் — வன்னிப் பகுதிக்கான கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கட்டுப்பாடற்ற பகுதிக்கு நோய்த் தடுப்பு மருந்துகளை எடுத்துச் செல்வதற்கு இருந்து வரும் தடை காரணமாக குறித்த மருந்துகளை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும்—

இதனால் வன்னிப்பகுதியில் உள்ள கால்நடைகள் பல்வேறு நோய்களின் தாக்கத்துக்கு உள்ளாகவோ அல்லது இறக்கவோ வேண்டிய சூழ்நிலை உண்டாகலாம் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## படகு...

(முதலாம் பக்கத் தொடர்)

பைக் கடவையில் இருந்து இரு அவசர நோயாளர்கள் நேற்று பள்ளிமுனைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

யாழ். கொழும்புத்துறையில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் வசித்து வந்த சின்னராசா கந்தையா (வயது 56) என்பவரும்—

விடத்தல் தீவைச் சேர்ந்த புஸ்பராஜன் ஜூட் சதீஸ் குமார் (வயது 22) என்பவருமே நேற்று அழைத்துவரப்பட்டு மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படுவர்.

அதே சமயம் அவசர நோயாளர்களை அழைத்து வருவதற்காக மன்னார்பள்ளிமுனையில் இருந்து இன்று 6 படகுகள் இலுப்பைக் கடவை இறங்கு துறைக்குச் செல்ல விருக்கின்றன.

(இ-3-7)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினரால் கண்டெடுக்கப்பட்டுப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த இரு சடலங்களும் மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இரு சடலங்களையும் பார்வையிட்ட மன்னார் பதில் நீதிவான் கலாஸ் பெல்டானோ பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். [இ-3-8]

## வன்னியில்...

[முதலாம் பக்கத் தொடர்]

மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கான இந்த மாதச் சம்பளம் காசோலையாகவே வழங்கப்பட்டதாகவும் —

இதனால் இவர்கள் தமது காசோலையைப் பணமாக மாற்றுவதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## 10 தற்கொலைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆனால் நீலன் திருச்செல்வம் கொல்லப்படும்வரை எவரும் இந்த தகவலை நம்பவில்லை என்றும் — சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய அதிகாரிகள் தமது போக்குவரத்துக்களைத் தற்சமயம் குறைத்துள்ளனா என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3-8)

# வவுனியாவில் மின்மாற்றி தகர்ப்பு

வவுனியா, ஒக. 2

வவுனியா ஆசைப்பிள்ளையார்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் மின்மாற்றி ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

இம் மின்மாற்றி தகர்ப்பினால் 14 லட்சம் ரூபாவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இப்பகுதிமுழுவதும் இருளில் மூழ்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை —

வவுனியா நகரிலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள சமனங்குளம் பகுதியில் மின்மாற்றி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

(இ-5-164)

# பயிற்சிப் பட்டறை

காரைநகர், ஒக. 2

தீவுப்பகுதி கிராம உத்தியோகத்தர்களின் ஆற்றல்களை மேம்படுத்துமுகமாக மூன்று நாள் பயிற்சிப் பட்டறை ஊர்காவற்றுறை மீள்குடியேற்றக் காரியாலயத்தில் நாளை முதல் மூன்று தினங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினரால் நடத்தப்படும் இந்தப் பயிற்சிப்பட்டறையை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் க. றஞ்சன் நெறிப்படுத்துவார்.

(இ-73)

# உணவு, மருந்து வகைகளை வன்னிக்கு அனுப்புங்கள்

## ஜெயலத் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஒக. 2

அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வன்னியில் வாழும் மக்களுக்கு உணவு, மருந்து ஆகியவற்றை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்கண்டவாறு ஐ.தே. கட்சி எம். பி. டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வன்னியில் மக்களின் நிலைமை படுமோசமாகிக் கொண்டே போகிறது. போதியளவு உணவோ, மருந்து வகைகளோ அங்கு இல்லை. எனவே வன்னிக்கான விநியோகத்தை மீண்டும் வழமை நிலைக்கு கொண்டு வரவேண்டும்.

இராணுவத்தால் மீட்கப்பட்டபகுதி, மீட்கப்படாத பகுதி என்ற பாகுபாட்டுக்கு இடமில்லை. வன்னி மக்கள் எல்லோரும் இலங்கை மக்களே. எனவே அரசு பாகுபாடு காட்டாமல் சகல மக்களுக்கும் உணவு, மருந்து வகைகளை கிடைக்கச் செய்ய வேண்டும்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா வடக்கு முதலான பகுதிகளைச் சேர்ந்த 5 லட்சம் பேர் உள்ளனர். அடிப்படை வசதிகள் யாவும் இவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. யுத்தம் காரணமாக வன்னி மக்கள் ஏனைய பகுதிகளில் இருந்தும் வேறுபட்டிருக்கிறார்கள்.

கிளிநொச்சி பகுதிகளில் இருந்து மக்கள் பலர் மல்லாவிக்கு வந்துள்ளனர். இதனால் மல்லாவியில் மக்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது—என்றுள்ளது.

(இ-7)

## மட்டுப்படுத்...

(முதலாம் பக்கத் தொடர்)

உதவினர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விஸ்தரிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-7)

## சர்வ...

[முதலாம் பக்கத் தொடர்]

நடைபெறவும் இறை ஆசி வேண்டி யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு சர்வமதப் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வன்னிப் பகுதி மாணவர்களின் ஏற்பாட்டில் வன்னி மாணவர் ஒன்றியம் இந்த சமய நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது,

பல்கலைக்கழக முன்றலில் நடைபெறவிருக்கும் மேற்படி சர்வமதப் பிரார்த்தனையில் சர்வமத குருமார்களும், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரும் கலந்துகொண்டு இறை ஆசிக்காக பிரார்த்தனையில் ஈடுபடுவர்.

வன்னிப் பகுதிக்கான தரைவழிப்பாதை ஒன்று திறக்கப்படும் வரைக்கும் இத்தகைய சாத்வீகமான போராட்டங்களை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று வன்னி மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் அனைத்துப் பீட மாணவர்களையும் இன்றைய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் வன்னி மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (இ-7)

## ஜி. சீ. ஈ...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டன.

அங்கிருந்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் வாகனங்கள் மூலம் மல்லாவிக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் வலய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன.

வலய அலுவலகங்களில் வைத்து அனுமதி அட்டைகளை வழங்கும் பணி நேற்று இரவிரவாக இடம்பெற்றது.

பரீட்சையில் இன்று இடம்பெறும் பாடங்களின் விவரங்களை நேர அட்டவணை மூலம் நேற்றே மாணவர்கள் அறிய முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டக் கல்வி நிர்வாக இணைப்பாளர் பொன். சபாபதி மற்றும் கல்வி அதிகாரி எஸ். சதாசிவம் ஆகியோரே இந்த வினாத்தாள்களை எடுத்து வந்தனர்.

பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் நேற்று மாலை வந்து சேர்ந்ததும், ஒலிபெருக்கி மூலம் அது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டது.

ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சை இன்று முதல் 24ஆம் திகதி வரை நாடு முழுவதும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தலைமன்னாரில்

# கடற்படைத் தளம் விஸ்தரிக்க காணி சுவீகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக. 2

தலைமன்னார்கடற்படைத் தளத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் தலைமன்னார் இறங்கு துறைக்கு மேற்குப் பகுதியில் ஐம்பது ஏக்கர் வரையான நிலப்பகுதியைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் படையினர் தமது பாதுகாப்பு வேலியை அமைத்துள்ளதால் இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

இந்தப் பகுதியைச் சுவீகரிக்கப் படைத்தரப்பு ஏற்பாடு செய்து வருவதாகக் கூறப்பட்டது.

# ரெலிக்கொம் முகாமையாளர்

ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்ப்பாணப் பிராந்தியத் தொலைத் தொடர்புச் சேவை முகாமையாளராக எஸ். அன்ரனிராசன் (அன்ரன்) எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார் என ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ். கனகசூரியர் தகவல் வெளியிட்டுள்ளார்

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் பணி புரியும் ரி. பாலசுப்பிரமணியம் மன்னார் பிரிவு பிராந்தியத் தொலைத் தொடர்பு முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## அனுருத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

ரத்வத்த தலைமையில் உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

படை அதிகாரிகள் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். (இ-3)

## வன்னி...

[முதலாம் பக்கத் தொடர்]

விரைவாக நீங்க வேண்டும் என்று கோரிப் பிரார்த்திக்கப்பட்டது.

யாழ். மரியன்னை பேராலயம், யாழ். புனித மரியாள் தேவாலயம், குருநகர், பாசையூர் ஆகியவற்றின் பங்கு மக்கள்உட்படசில்லாலைபண்டத்தப்பு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து கலந்துகொண்டு இந்த வழிபாட்டை நடத்தினர்.

இந்த வழிபாட்டு நிகழ்வில் யாழ், கத்தோலிக்க ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபை ஆயர் அதிவண எஸ். ஜெபநேசன் அங்கிலிக்கன் திருச்சபை, மதகுரு வண. என். ஜே, ஞானப்பொன்ராஜா மற்றும் கன்னியாஸ்திரிகள் உட்பட சுமார் ஆயிரம் பேர்வரை கலந்து கொண்டனர்.

வழிபாடு இடம்பெற்ற ஆலயத்தின் சுவர்களில் அட்டையில் எழுதப்பட்ட பல வாசகங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

★ இறைவா உணவும் எமக்கெதிரான ஆயுதமானதே.

★ தாய் மண்ணின் அவலங்கள் பாரும். சேய்களின் அழுகுரல் கேளும்.

★ பசித்தோருக்கு உணவு கொடு. வாழ்வதற்கு உரிமை கொடு.

★ நிலமெல்லாம் இரத்த வெள்ளம் கண்டும் இளகாதோ உந்தன் உள்ளம்.

★ புதைக்கப்படும் மானிட பண்புகள் விடுதலை பெறவாரும் இறைவா.

★ நீதியின் தேவனே வர வேண்டும் நிம்மதி எம்வாழ்வில் தரவேண்டும்.

★ போர் வேண்டாம் நீதியும் நிம்மதியும் வேண்டும்.

★ உணவுக்காக, மருந்துக்காக கையேந்தும் எம் மக்களின் அழுகுரல் கேளும்.

★ மாதாவே மாதாவே என்று கதறிஅழும் எம் வன்னி உடன் பிறப்புக்களின் அவலக் குரல் கேளும்.

— என்று சுலோக அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன.

இதேவேளை —

வன்னி மக்களின் நிலைமைகளை விளக்கி யாழ். மறைவட்ட, கத்தோலிக்க பொது நிலையினர் ஆணைக்குழு, யாழ். கத்தோலிக்க மறைவட்ட குருக்கள் ஒன்றியம் என்பவற்றால் ஜனாதிபதிக்கு மகஜர்கள் தனித்தனியே அனுப்பிவைக்கப்பட்டன.

(9 ஆம் பக்கமும் பார்க்க)

(இ-9-ரீ)

## பரீட்சை......

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்கண்டவாறு மல்லாவியில் தெரிவித்தார்.

வன்னிக்கான வினாத்தாள்களை எடுத்துச்சென்று அங்கு விநியோகப் பணிகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

வவுனியாவில் உயர்தர வகுப்பு மாணவர்களும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு பல்கலைக் கழகங்களில் பல்கலைக்கழக மாணவர்களும் நடத்திய போராட்டத்தின் அழுத்தம் காரணமாக இங்கு பரீட்சையை நடத்த முடிந்தது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


# மருதம் கொமினிக்கேசன்

T. P. - 070 - 212229, 070 - 212329
FAX - 070 - 212371

வெளிநாட்டு "இன்கமிங் கோல்" களுக்கு நிமிடம் 3/-

போட்டோ கொப்பி ஒரு பிரதிக்கு 3/- மட்டுமே.
மேலும் தொகையான பிரதி எடுப்பவர்களுக்கு
கழிவு வழங்கப்படும்.
100 க்கு மேற்பட்ட பிரதிக்கு 2 வீதம் மட்டுமே.

மேலும்

திருமண அழைப்பிதழ்கள் — நினைவஞ்சலி
புத்தகங்கள் — கலர் போட்டோ வசதிகளுடன்
அதி நவீன கம்பியூட்டர் சாதனங்களின் மூலம்
செய்து கொடுக்கப்படும்.

நெ. ம. ம. வி. தெரு,
நெல்லியடி, கரவெட்டி.

(சி/8329)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-08-99 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org